# விளக்கம் ப்ளீஸ் விவேக்!

★ பெண்களுக்கு குரல் இனிமையாகவும் ஆண்களுக்கு கரடு முரடாகவும் இருப்பதற்குக் காரணம் என்ன...?

(பா.வித்யாதரன், தரங்கம்பாடி.)

★★ நம் தொண்டையின் மையப்பகுதியில் உள்ள குரல்வளைதான் சத்தம் உருவாக்கும் முக்கிய கருவியாக உள்ளது. குரல்வளையில் உள்ள இரண்டு அடுக்கு கொண்ட திசுவான் வோக்கல் கார்டுதான் நாம் பேசுவதற்கும், பாடுவதற்கும் காரணமாக அமைகிறது. வோக்கல் கார்டுகளுக்கு இடையே அழுத்தம் ஏற்படும் போது அவைகளில் அதிர்வு ஏற்பட்டு சப்தம் உண்டாகிறது. பெண்களுக்கு குரல், இனிமையாக இருப்பதற்குக் காரணம் வோக்கல் கார்டுகள் நெகிழ்ந்து போகாமல் விறைப்புத் தன்மையோடு இருப்பதுதான்!. ஆண்களின் வோக்கல் கார்டுகள் விறைப்புத்தன்மை குறைந்து நெகிழ்வோடு இருப்பதால் குரல் கரடு முரடாக இருக்கிறது. ஒரு ஆணுக்கு 13 வயது வரை குரல் ஒரு பெண்ணின் குரல் போலவே இருக்கும். பிறகு, வோக்கல் கார்டுகள் சற்றே தளர்வதால் குரல், உடைந்து கரகரப்பாய் மாறுகிறது. ஆனால் பெண்களுக்கு மட்டும் வோக்கல் கார்டுகள் மேலும் விறைப்படைந்து குரல் மென்மையாக மாறும். இந்த மென்மையான குரல், பெண்களுக்கு அவர்களுடைய 50-வது வயது வரை நீடிக்கும். அதன் பிறகு பெண்களுக்கும், வோக்கல் கார்டுகள் நெகிழ்வதால் சில பெண்

களுக்கு ஆண் குரல் போலவே மாறிவிடுகிறது. 60 வயதுக்கு மேல் ஆண்களுக்கும் சரி, பெண்களுக்கும் சரி, வோக்கல் கார்டுகள் ஒன்றையொன்று உரசிக் கொள்ள ஆரம்பித்து விடும். இதன் காரணமாக குரலில் ஒரு தளர்ச்சியும் நடுக்கமும் உண்டாகும். சிலர்க்கு வார்த்தை உச்சரிப்பும் தெளிவாய் இருக்காது. பெண்ணாக இருந்தாலும் சரி; ஆணாக இருந்தாலும் சரி தொண்டையில் உள்ள வோக்கல் கார்டை தளர்வடையாமல் பார்த்துக் கொண்டால் குரல் எந்த வயதிலும் மாறாமல் இருக்கும். இதற்காக நாம் சிலவற்றை தவிர்க்க வேண்டும். முக்கியமாக மது அருந்துவது கூடாது. ஏனென்றால் மது அருந்தும் போது தொண்டையில் உள்ள அத்தனை தசைகளும் பாதிக்கப்படுகிறது. சிகரெட் புகையும் குரல் நாண்களுக்கு எதிரி. மாசு நிறைந்த காற்றையும் சுவாசிக்கக்கூடாது. தொண்டையை எப்போதும் ஈரமாக வைத்து இருக்க வேண்டியது அவசியம். நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும்.

**★ நாகப்பாம்பின் விஷம்தான் மாணிக்கக் கல்லாக மாறுகிறது என்பது உண்மையா?**

**(எஸ்.செந்தூர் முருகன், திருநெல்வேலி)**

★★ உண்மையல்ல என்பதை மும்பை கனிமத்துறை பேராசிரியர் பிரபு ஒரு கட்டுரையில் திட்டவட்டமாக சொல்லியுள்ளார். ஒரு நாகப்பாம்பு 100 வருஷம் உயிர் வாழும் என்பதும், அந்த பாம்பு தன் வாழ்நாளில் யாரையும் கடிக்காமல் இருந்திருத்தால் அந்த விஷம் இறுகி ஒரு மாணிக்கக் கல்லாக மாறும் என்பதும், அந்த மாணிக்கக்கல்லை ராத்திரி நேரத்தில் பாம்பு உமிழ்ந்துவிட்டு அந்த மாணிக்கக்கல்லின் வெளிச்சத்தில் இரை தேடும் என்பதும் வெறும் கற்பனைதான். உண்மையில்



மாணிக்கக்கல் என்பது ஒரு கனிமப் பொருள். அதில் உள்ள ரசாயனப் பொருள்கள் அலுமினிய ஆக்ஸைட், குளோரியம். இது 2050 சென்டிகிரேட் வெப்பத்தில் உருகக்கூடியது. இந்த மாணிக்கக்கல் அதிகமாய் கிடைக்கக்கூடிய நாடுகள் பர்மா, மேன்டேலே. ஓரளவு கிடைக்கக் கூடிய நாடுகள் தாய்லாந்து, கம்போடியா, ஆப்கானிஸ்தான். நிறம், அமைப்பு, ஒளிரும் தன்மை, எடை இவைகளை வைத்தே இதன் விலையை நிர்ணயம் செய்கிறார்கள்.

**★ உலகத்தில் உள்ள எல்லா நாடுகளிலும் ரூபாய் நோட்டுகளை காகிதத்தில்தான் அச்சடிக்கிறார்களா...?**

**(எம்.சீதாபதி, திருச்சி - 2)**

★★ 1987 வரை எல்லா நாடுகளும் ரூபாய் நோட்டுகளை காகிதத்தில்தான் அச்சடித்து புழக்கத்தில் விட்டு வந்தன. சமூக விரோதிகள் நவீன ஜெராக்ஸ், போட்டோ காப்பியிங் இயந்திரங்களைப் பயன்படுத்தி அசல் நோட்டுகளைப் போலவே கள்ள நோட்டுகளை அச்சடித்ததால் பல நாடுகள் விழி பிதுங்கி என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தன. இந்தப் பிரச்னைக்கு முதன் முதலில் தீர்வு கண்ட நாடு ஆஸ்திரேலியாதான். 1988-ம் வருஷம் அந்த நாடு 'பாலிமர்' என்ற பிளாஸ்டிக்கை பயன்படுத்தி ரூபாய் நோட்டுகளை அச்சடித்தது. பாலிமர் பிளாஸ்டிக்குடன் ஒரு ரசாயன பூச்சு பொருளைக் கலந்து ரூபாய் நோட்டுகள் தயாரிக்கப்படுவதால் அது தண்ணீரில் நனைந்தாலும் வாட்டர்ப்ரூஃபாக செயல்பட்டு ரூபாய் நோட்டுகளைப் பாதுகாக்கிறது. பிளாஸ்டிக் நோட்டில் எண்களையும் எழுத்துகளையும் பதிக்க மெட்டாலிக், மெட்டாமெரிக், மெட்டா குரோமிக் போன்ற சிறப்பு ரக மைகள்

உபயோகப் படுத்தப்படுகின்றன. சமூக விரோதிகள் இந்த பிளாஸ்டிக் நோட்டுகளைப் பயன்படுத்தி கள்ள நோட்டுகளைத் தயாரிக்க முடியாது. காகித நோட்டுடன் ஒப்பிடும் போது இதன் ஆயுள் 5 மடங்கு அதிகம். தற்போது பாலிமர் பிளாஸ்டிக்கில் ரூபாய் நோட்டுகளை அச்சிடும் நாடுகள்: சிங்கப்பூர், நேபாளம், இந்தோனேஷியா, நியூசிலாந்து, தாய்லாந்து, நியூகினியா. (இந்தியா யோசித்து வருகிறது.)

**★ வேடந்தாங்கலுக்கு வரும் பறவைகள் வெளிநாடுகளிலிருந்து வருவதாக சொல்லப் படுகிறது. அவை எந்த அடையாளங்களை வைத்துக் கொண்டு கண்டம் விட்டு கண்டம் பறந்து வருகின்றன?**

**(ஏ.முருகசுந்தரம், தஞ்சாவூர்)**

★★ தமிழ்நாட்டில் வேடந்தாங்கலைப் போல் எத்தனையோ **பறவைகள் சரணா லயங்கள்** உண்டு. ஒவ்வொரு ஆண்டும் இந்த சரணாலயங்களுக்கு விதவிதமான பறவைகள் ரஷ்யா, அமெரிக்கா, ஆப்ரிக்கா போன்ற நாடுகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான மைல்கள் பறந்து வருகின்றன. எந்த ஒரு திசைகாட்டும் கருவியின் உதவியும் இல்லாமல் எப்படி ஒவ்வொரு வருடமும் சரியாக இவை சரணாலயங்களுக்கு வந்து செல்கின்றன என்பது பறவை ஆராய்ச்சியாளர்களையே வியப்படைய வைத்துள்ளது. சரணாலயத்திற்கு ஒரு தடவை வந்த பறவைகள் மறுபடியும் அடுத்த பருவகாலத்தில் பறந்து வரும் போது வழியில் குறுக்கிடும் மலைகள், நதிகள், ஏரிகள், பெரிய பெரிய பாலங்கள் போன்றவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு சரியாக வந்து சேர்கின்றன. இன்னும் சில பறவைகள் சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங் களையும் அடையாளம் வைத்துக் கொண்டு பறந்து வருகின்றன. சூரியனைக் காண முடியாத



அளவுக்கு மேகங்கள் சூழ்ந்து இருந்தாலோ... வானத்தில் மழை பெய்து கொண்டு இருந் தாலோ பூமியின் புவி ஈர்ப்பு விசை மற்றும் காந்த விசையை அடிப்படையாகக் கொண்டு பறவைகள் தங்கள் உடலில் இருக்கும் 'மேக்னடைட்' என்ற தாதுவை திசை காட்டும் கருவியாகப் பயன் படுத்தி சரியான திசையில் பறந்து சரணாலயங்களை அடைகின்றன.

**★ நயாகரா நீர்வீழ்ச்சியின் உயரம் எவ்வளவு? உலகத்திலேயே அதைக் காட்டிலும் பெரிய அருவி உள்ளதா...?**

**(வி. ஜெயசிம்மன், திருப்பூர்.)**

★★ நயாகரா நீர்வீழ்ச்சியின் உயரத்தைக் காட்டிலும் அதன் அகலம்தான் நம்மை பிரமிக்க வைப்பது. இது அமெரிக்கப் பகுதியில் 27 கிலோ மீட்டர் நீளமும் கனடாவின் பகுதியில் 120 கிலோ மீட்டர் நீளமும் கொண்டதாக நயாகரா அருவி அமைந்துள்ளது. நயாகரா மொத்தம் 3 பிரிவுகளாகப் பிரிந்து பெரும் இரைச்சலோடு கொட்டுகிறது. பனிப்பாறைகள் நிறைந்த பகுதியில் பூகம்பம் நிகழ்ந்த போது பெரிய பெரிய பனிப்பாறைகள் உடைந்ததால் நயாகரா நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு அதன் விளைவாக அமெரிக்க - கனடா பகுதியில் 167 அடி உயரத்திலிருந்து விழுந்து இந்த பெரிய அருவி உருவானதாக புவியியல் வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நயாகரா அருவியிலி ருந்து தயாரிக்கப்படும் மின்சாரம் அருவியின் இரு கரைகளில் உள்ள ஒன்டாரியோ, நயாகரா என்ற இரண்டு நகர்களின் மின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. அமெரிக்கப் பகுதியில் கொட்டும் நயாகராவைக் காட்டிலும் கனடா பகுதியில் கொட்டும் நயாகரா அருவிக்குத்தான் மவுசு அதிகம். கனடா பகுதி நயாகரா அருவி இரவில் வண்ண விளக்கொளியில் ஜொலிப்பது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். நயாகரா






## 1

நேரம் : 06.37.24

இடம் : இண்டியன் ஸ்பேஸ் ரிசர்ச் ஆர்கனைஸேஷன்.

உள்ளே இருந்த கடைநிலை ஊழியரிலிருந்து உயர்நிலை அதிகாரிகள், விஞ்ஞானிகள் வரை அத்தனை பேர் முகத்திலும் வியர்வை மினு மினுப்போடு பரபரப்பும் சேர்ந்து அரும்பியிருக்க -

ஐ.எஸ்.ஆர்.ஓ. கட்டிடத்தின் மையத்தில் அமைந்திருந்த விஸ்தாரமான டீப்ளாய்மென்ட் தளத்தில் - பிரம்மாண்டமான ஏ.எஸ்.எல்.வி. ராக்கெட் கம்பீரமான உருவத்தோடு விறைப்பாய் வானத்தைப் பார்த்து நின்றிருக்க -

டி.வி. காமராக்கள் ஆங்காங்கே இடம் பிடித்து லைவ் ரிலேக்காகக் காத்திருக்க -

ஒவ்வொரு விநாடியும் அங்கே உயிர்ப்போடு தெரிந்தது.

கண்ணாடித் தடுப்புக்கு அப்பால் பத்திரிகை யாளர்கள் காலரி; வி.ஐ.பி.கள் காலரி.

அந்த வி.ஐ.பி. காலரியையும் இரண்டாகப் பிரித்து வி.வி.ஐ.பி. காலரியை உச்சபட்ச பாதுகாப்பு ஏற்பாடுகளோடு வைத்திருந்தார்கள். உள்ளே -

சிவப்பு வெல்வெட் நாற்காலிகளில் -

பிரதமர் -

ராணுவ அமைச்சர் -

விண்வெளித் துறைச் செயலர் -

மற்றும் சில உயர் அதிகாரிகள்.

அத்தனை பேருடைய பார்வைகளும், தளத்தை விட்டு ராக்கெட் சீறிக் கொண்டு கிளம்பும் விநாடிக்காக ஆணியடித்த மாதிரி காத்துக் கொண்டிருந்தன.

ஐ.எஸ்.ஆர்.ஓ.வின் இயக்குநர் நட்வர்லாலிடம் பிரபல ஆங்கில வார இதழின் நிருபர் பிடிவாதமாய்

ஐந்தே ஐந்து நிமிஷங்கள் மட்டும் வாங்கிக் கொண்டு கம்ப்யூட்டர்களும், பேனல் போர்டுகளும் துடித்துக் கொண்டிருந்த ஏ.சி. அறைக்குள் அந்த நிமிஷங்களை வீணாக்காமல் படபடப்பாகக் கேள்விகளை வீசிக் கொண்டிருந்தார்.

''மிஸ்டர் டைரக்டர்... இது இந்தியா விண்ணில் செலுத்தும் எத்தனையாவது ராக்கெட்...?''

நட்வர்லால் புன்னகைத்தார்.

''எண்ணிக்கை முக்கியம் இல்லை... இப்போது நாம் அனுப்புகிற ராக்கெட்டின் சிறப்பம்சம் என்ன என்று கேட்டால் அது நல்ல கேள்வி...''

அந்த நிருபர் முகத்தில் ஒரு விநாடி கோபம் தெரிந்தாலும் அதை சின்னப் புன்னகையால் மறைத்துக் கொண்டு அவரைப் பார்த்து மைக்கை நீட்டினார்.

''கேள்வியை நீங்களே எடுத்துக் கொடுத்து என் வேலையை சுலபமாக்கி விட்டீர்கள்... அந்தக் கேள்வியை நான் கேட்டதாக நினைத்துக் கொண்டு பதில் சொல்லுங்கள் ப்ளீஸ்... இப்போது நாம் அனுப்பும் ராக்கெட்டின் விசேஷம் என்ன...?''

''இந்த ராக்கெட் முதல் முதலாக நவீன க்ரையோஜெனிக் தொழில் நுட்பத்தின் அடிப் படையில் இயங்கும் வண்ணம் உருவாக்கப் பட்டுள்ளது... அதை விட சிறப்பம்சம் வெளிநாட்டிடம் டெக்னாலஜியை இரவல் பெறாமல் முழுக்க முழுக்க நம் இந்திய விஞ்ஞானிகளாலேயே உருவாக்கப்பட்டு இப்போது செலுத்தப்பட உள்ளது....''

''திட்டமிட்டபடி ஏழு முப்பது மணிக்கு ராக்கெட் விண்ணில் ஏவப்படுமா...?''

''ஆம்...''

''ட்ரையல் ரன் ஏதும் ஏற்கெனவே செய்து பார்க்கப்பட்டதா...?''

''இதைப் போல ஒரு ராக்கெட்டை உருவாக்க ஏறக்குறைய நாற்பது கோடி ரூபாய் செலவழிக்க வேண்டும். ட்ரையல் அண்ட் எரர் மெத்தட்களுக்கு இங்கே வேலை இல்லை... ஒத்திகை என்ற



வார்த்தைக்கெல்லாம் இடம் இல்லை... ஒவ்வொரு சின்னச் சின்ன விஷயமும் துல்லியமான முறையில் சரிபார்க்கப்பட்டு எடுத்த எடுப்பிலேயே அரங்கேற்றம்தான்...''

''ஹ்யூமன் எரர் என்பது மனிதனின் கையை மீறிப் போய் எல்லா இடங்களிலும் தவறு ஏற்பட வாய்ப்புள்ளது... மனிதன் வேலை செய்யும் இடங்களில் எல்லாம் இவ்வளவு சதவீதம் ஹ்யூமன் எரர் இருக்கலாம் என்று டாலரன்ஸ் கொடுக்கப் படுகிறது. இந்த ராக்கெட் ஏவும் பணியைப் பொறுத்தவரை அனுமதிக்கப்பட்ட ஹ்யூமன் எரர் எவ்வளவு...?''

சிரித்தார் நட்வர்லால். ''ஜீரோ எரர்...'' சொன்னவர் தொடர்ந்தார்.

''ராக்கெட்டை விண்ணில் செலுத்தக் கூடிய கோணத்தையும், வேகத்தையும் கணக்கீடு செய்வதில் சில தசம ஸ்தானங்கள் மாறினாலும் பிரம்மாண்டமான அண்டவெளிப் பரப்பில் இந்த நாற்பது கோடி ரூபாய் உருவம் நிமிஷங்களில் கண்காணாமல் மறைந்து போக வாய்ப்பு உள்ளது... பணம் மட்டுமல்ல – விலை மதிக்க முடியாத மனித நேரமும் வீணாய்ப் போய் விடும்... ஸோ... இங்கே நோ ஹ்யூமன் எரர்.''

''அப்படியானால் இங்கிருக்கும் விஞ்ஞானிகள் கணக்கீடுகளில் சின்னத் தவறு கூட செய்ய மாட்டார்களா...?''

''ஹ்யூமன் எரர் என்பது மனிதன் வேலை செய்யும் எல்லா இடங்களிலும் சாத்தியமானதே என்று நீங்கள் தான் ஏற்கெனவே சொல்லி விட்டீர்களே... அதனால்தான் விண்வெளி கால்குலேஷன்களுக்கு மனிதர்களை விட பெரும்பாலும் சூப்பர் கம்ப்யூட்டர் களையே நம்பி இருக்கிறோம்... அவைகள் தரும் துல்லியமான ரிசல்ட்களின் அடிப்படையில் ராக்கெட்டின் இயங்கு விசைகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன...''

''அப்படியானால் ராக்கெட்டின் மொத்த கன்ட்ரோலும் அந்த சூப்பர் கம்ப்யூட்டரிடம் என்று சொல்லலாமா...?''

''தாராளமாய்ச் சொல்லலாம்...''

நட்வர்லால் தலையசைத்த விநாடி -

அவர் எதிரே இருந்த மானிட்டர் திரையில் பளிச்சென்ற முகத்தோடு ஒரு இளைஞன் தோன்றி - நட்வர்லாலை நேரில் பார்த்துப் பேசுபவன் போல வாயை அசைத்தான்.

சிறிய ஸ்பீக்கர்களில் அவன் குரல், ரகசியம் பேசுவது போல் கேட்டது.

''எக்ஸ்க்யூஸ்மி ஸார்... கன்ட்ரோல் ரூம் சயன்ட்டிஸ்ட்ஸ் வான்ட்யூ...''

வாட்சைப் பார்த்தவர் பரபரப்பானார்.

''நேரம் ஏழாகி விட்டது... ஐந்து நிமிஷங்கள் அதிகமாகவே எடுத்துக் கொண்டு விட்டீர்கள்... கண்ட்ரோல் அறையில் கடைசிக்கட்ட பணிகள் ஏராளமாய்க் காத்திருக்கின்றன...''

வேகமாய் அவர் நகர்ந்து செல்ல - பத்திரிகை நிருபர் வரவழைத்துக் கொண்ட உற்சாகத்தோடு சொன்னார்.

''விஷ் யூ ஆல் த பெஸ்ட்...''

நட்வர்லால் அவசர நடையில் கன்ட்ரோல் அறையைத் தொட்டு பேனல் போர்டுகளின் அருகே சென்றார்.

அங்கிருந்த இளம் விஞ்ஞானிகளிடம் உற்சாகத்தோடு ''கடைசி நிமிட சரிபார்ப்புகள் முடிந்து விட்டனவா...?'' என்று கேட்டார்.

தலையாட்டினார்கள்.

''எவ்ரிதிங் ஓக்கே ஸார்...''

''பிரதமரிடம் கவுண்ட் டவுன் ஆரம்பமாகப் போகிறது என்று சொல்லி விடலாமா...?''

''சொல்லி விடலாம் ஸார்...''

தன் கையிலிருந்த கார்ட்லெஸ்ஸின் ஓரிரு பொத்தான்களை அழுத்தினார் நட்வர்லால்.

அவர் அழுத்துகிற போதே - முதுகுப் புறம் அவரை ஒரு கை தொட்டது.

''ஸார்...''

நட்வர்லால் திரும்பிப் பார்க்க - ப்ரெஞ்ச் தாடியுடன்



மூத்த விஞ்ஞானி சோப்ரா நின்றிருந்தார். அவர் முகத்தில் கனமாய் இருட்டு அப்பிக் கிடந்தது.

''கொஞ்சம் இப்படி வாருங்கள்...''

அவருடைய ஸீரியசான முகத்தைப் படித்தவராய் அவர் பின்னால் கேள்விக் குறியோடு சென்றார் நட்வர்லால்.

பிரம்மாண்டமான உயரத்துடன் இருந்த சூப்பர் கம்ப்யூட்டர் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் அவரைக் கூட்டிச் சென்றார் சோப்ரா.

நட்வர்லால் நடந்து கொண்டிருக்கும் போதே கேட்டார்.

''எனி ப்ராப்ளம்...?''

''எஸ்! இப்போது ராக்கெட் செலுத்தப்பட வேண்டுமா என்று யோசிக்கிற அளவுக்குப் பிரச்னை...''

பதட்டத்தோடு பார்த்தார் நட்வர்லால்.

''என்ன சொல்கிறீர்கள்...?''

''கால்குலேஷன்களில் மிகப் பெரிய தவறு நேர்ந்திருக்கிறது... இந்தக் கணக்கீடுகளின் அடிப்படையில் ராக்கெட் கிளம்பினால் திட்டமிட்டபடி செல்லாது... அத்தனைக் கோடிகளும் கடலுக்கு விரயமாகும்...''

''மை குட்னஸ்... எங்கே தவறு நேர்ந்தது...?''

''இந்த சூப்பர் கம்ப்யூட்டரில்...'' பக்கத்தில் இருந்த கம்ப்யூட்டரைக் காட்டினார்.

''என்ன தவறு...?''

''இதை வடிவமைத்தது நம் இந்திய விஞ்ஞானிகள் தான்... அமெரிக்கா இதன் தொழில் நுட்பத்தை நமக்குத் தர மறுத்ததால் யாருடைய உதவியும் இல்லாமல் நாமே வீம்புக்காக இதைச் செய்தோம்...' இதை முழுமையான சூப்பர் கம்ப்யூட்டர் என்று சொல்ல முடியாது... வி ஹேவ் டன் ஏ க்ரேட் மிஸ்டேக்''

''பிரதமர், ராணுவ மந்திரி எல்லோருமே வந்து விட்டார்களே...?''

''என்ன செய்வது...? கடைசி நிமிஷத்தில்தான் நானே இந்தப் பிரச்னையை ட்ரேஸ் செய்தேன்...

தெரியாமல் தோல்வியைத் தழுவுவது வேறு...! தெரிந்தே தோல்வியைப் பெறுவது வேறு... பிரதமரின் கோபத்திற்கு பயந்து நாற்பது கோடி ரூபாய் இந்தியப் பணத்தை கடலுக்கு இறைக்க வேண்டாம் என்று கருதுகிறேன்..." யோசிக்க சில விநாடிகள் எடுத்துக் கொண்ட நட்வர்லால் - பின் வி.வி.ஐ.பி. கேலரிக்குச் சென்று பிரதமரிடம் குனிந்து தயக்கத்தோடு விபரத்தைச் சொன்னார்.

குபீரென்று கோபச் சிவப்பு முகத்தில் பரவ எரிச்சலானார் பிரதமர்.

"கடைசி நிமிஷத்தில் இதென்ன கேலிக்கூத்து? ஹைலி இடியாட்டிக்..."

"கம்ப்யூட்டர் விஞ்ஞானிகள் கடைசி நிமிஷத்தில்தான் இந்தத் தவறைக் கண்டுபிடித்தார்கள்..."

"அப்படியானால் இப்போது திட்டமிட்டபடி ராக்கெட்டைச் செலுத்த முடியாதா...? நம் நாட்டின் கவுரவம் இதில் அடங்கியிருக்கிறது தெரியுமா...?"

"ராக்கெட்டைச் செலுத்த முடியும் ஸார்... ஆனால் ஸக்ஸஸ் ரேட் ஐம்பது சதவீதம்தான்... திட்டமிட்ட பாதையில் செல்லவும் வாய்ப்புள்ளது... கடலில் சென்று விழவும் வாய்ப்புள்ளது... அரசியல் சூழ்நிலை... உலக அரங்கில் இந்தியாவின் கௌரவம் ஆகியவற்றை உத்தேசித்து செலுத்தலாமா வேண்டாமா என்பதை இனி நீங்கள்தான் சொல்ல வேண்டும்..."

"உண்மையில் என்ன தவறு நேர்ந்திருக்கிறது...?"

"கம்ப்யூட்டரைஸ்டு கன்ட்ரோல்களில் சில தவறுகள்..."

"அதை சரி செய்ய முடியுமா...? முடியும் என்றால் எத்தனை நாட்கள் அவகாசம் தேவைப்படும்...?"

"பத்து நாட்கள். அதற்குள் அந்தக் கம்ப்யூட்டர் கன்ட்ரோல்களைச் சரி செய்து விடுகிறோம்..."

"வெளியே சென்றதுமே பத்திரிகையாளர்கள் துளைத்து எடுத்து விடுவார்கள்... அவர்களுக்கு என்ன பதில் சொல்வது...?"



"ஒரு டெக்னிக்கல் எரர் நேர்ந்துள்ளது... அதனால் ராக்கெட்டை செலுத்துவதில் தவிர்க்க முடியாத தாமதம் ஏற்பட்டிருக்கிறது... விஞ்ஞானிகள் பத்து நாள் அவகாசம் கேட்டு இருக்கிறார்கள்... என்று சொல்லுங்கள் ஸார்..."

"பதினோராவது நாள் எந்த சமாதானமும் சொல்லாமல் உறுதியாக செலுத்த முடியும் அல்லவா...?"

"முடியும் ஸார்..."

பிரதமர் கோபமாய் கேபினை விட்டு வெளியே வர, பத்திரிகை நிருபர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

ராக்கெட்டைச் செலுத்துவது ஒத்திப்போடப் பட்டுள்ள விஷயத்தை அவஸ்தையான குரலுடன் பத்திரிகையாளர்களிடம் சொல்லி விட்டு வேகமாய்க் காரில் ஏறினார் பிரதமர்.

காரில் ஏறும் போது இறுகிய முகத்துடன் நட்வர்லாலிடம் சொன்னார்.

"இன்னொரு முறை இதே போல தர்ம சங்கட நிலைமையை உண்டாக்கி விடாதீர்கள்... நீங்கள் கேட்ட கால அவகாசத்தை முழுமையாக அளித்திருக்கிறேன்..."

சிவப்பு விளக்கு சுழலும் பைலட் கார்களோடு அமைச்சர்கள் அங்கிருந்து அகல, நட்வர்லால் கவலையோடு கம்ப்யூட்டர் அறைக்கு வந்தார்.

சோப்ரா கேட்டார்.

"பிரதமரின் கோபத்தை சமாளித்து விட்டீர்களா...?"

"பத்து நாள் அவகாசத்தில் தவறுகளை சரிப்படுத்தி பதினோராவது நாள் ராக்கெட்டை விண்ணில் வெற்றிகரமாகச் செலுத்தி விடலாம் என்று சொன்னேன்... அவர் ஏற்றுக் கொண்டார்..."

நட்வர்லால் சொல்ல - சோப்ராவின் முகம் கெட்டியான இருட்டுக்குப் போயிற்று.

"பத்துநாள் அவகாசத்தில் இந்த தவறு சரி செய்யப்படும் என்று எனக்குத் தோன்றவில்லை மிஸ்டர் நட்வர்லால்..."

## 2

அழகான அந்த சர்தார்ஜி இளைஞன் டர்பனை சரியாய்ப் பொருத்திக் கொண்டே ஆட்டோ விலிருந்து இறங்கினான்.

புத்தம்புது ஐம்பது ரூபாய் நாசிக் தாளை நீட்டி விட்டு, ''பாக்கியை நீயே வெச்சுக்கோ...'' என்கிற மாதிரி சைகை செய்தபோது - ஆட்டோ டிரைவர் திணறலாக ஹிந்தியில் சொன்னான்.

''ஜி... ஜப் ஜப் ஆப்கோ ஆட்டோ சாஹியே... தப்...''

அவனைப் பாதியில் துண்டித்தான் சர்தார்ஜி.

''நான் பிறந்தது அமிர்தசரஸ்... ஆனா வளர்ந்ததெல்லாம் தமிழ்நாட்டில்தான்... எனக்கு தமிழ் ரொம்ப நல்லா தெரியும்... ஹிந்தியைக் கொலை செய்யாம தமிழ்லயே நீ என் கிட்டே பேசலாம்...''

அசடு வழிந்த ஆட்டோ டிரைவர் சிரித்துக் கொண்டே தமிழுக்கு மாறினான்.

''நான் இந்த ஹோட்டலுக்கு எதிரே இருக்கற ஆட்டோ ஸ்டாண்டில் தான் ஸார் எப்பவும் இருப்பேன்... என் பேர் வடிவேல்... 'வடிவேல் ஆட்டோவை வரச் சொல்லுங்க'ன்னு ரிசப்ஷன்ல சொல்லிட்டிங்கன்னா போதும்... அவங்க என்னைக் கூப்பிட்டுக்குவாங்க... நீங்க மாடியிலிருந்து கீழே இறங்கி வர்றதுக்குள்ளே போர்டிகோவில் நான் தயாரா வந்து நிப்பேன்...''

நீளமாய் அவன் பேசி முடித்து மூச்சு வாங்க - சர்தார்ஜி இளைஞன் தலையை ஆட்டினான்.

''ஆட்டோ தேவைப்பட்டா நான் உன்னையே கூப்பிடறேன்...''

டிரைவர் சலவை நோட்டை பாக்கெட்டில் சொருகியபடியே -

''தாங்க்ஸ் ஸார்...'' என்று சொல்லி ஆட்டோவின் கிக்கரை உதைத்தான்.

ஹோட்டலில் - அகலமான படிக்கட்டுகளில்



மளமளவென்று உயர்ந்தான் சர்தார்ஜி.

கண்ணாடிக் கதவைத் தள்ளி உள்ளே போக, ஏசி குளிர்ச்சியுடன் ரிசப்ஷன் ஹால் வந்தது. மெத்தென்று தரை விரிப்பு அவன் ஷூ கால்களைக் கால் இஞ்சுக்கு உள்ளே வாங்கியது. அகலமான தஞ்சாவூர்த் தட்டுகள் சுவர்ப்பரப்பில் ஆங்காங்கே அப்பிக் கிடந்தன.

ரிசப்ஷனிஸ்ட் பெண் டெலிபோனுடன் ரகசியம் பேசிக் கொண்டிருந்தாள். கலர் டி.வி.யில் ஆங்கில சேனலின் காம்ப்பியர் பெண் ஆடிக் கொண்டே பேசிக் கொண்டிருக்க பைஜாமா அணிந்த நரை முடி ஆசாமிகள் இருவர் சோபாவில் நிரம்பி டி.வி.யை பார்வையால் விழுங்கிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களையெல்லாம் கடந்து சர்தார்ஜி லிஃப்ட்டைத் தொட்டான். லிஃப்ட் சின்னக் குலுங்கலோடு மாடியை நோக்கி ஊஞ்சலாட ஆரம்பித்தது.

இரண்டாவது தளம் வந்ததும் - லிஃப்ட்டுக்கு விடை கொடுத்தான்.

மார்பிள் தரை வராந்தாவைக் காலடியில் நழுவ விட்டவன் - அறை எண் 114-ன் சாவித் துவாரத்தில் லெதர் கீ செயினுடன் இருந்த சாவியை நுழைத்தான்.

உள்ளே சென்று கதவைத் தாளிட்டவன் உடைகளைக் களையும் உத்தேசத்துடன் கோட் பட்டனில் கையை வைக்க -

டொக்...

டொக்...

டொக்...

கதவு தட்டப்பட்டது.

கழற்றிய பொத்தானை மாட்டிக் கொண்டு கதவின் கைப்பிடியைக் கீழே அழுத்தினான்.

கதவைக் கால் வாசி திறந்து வெளியே பார்வையைப் போட்டான்.

நடுத்தர வயதில் இருந்த ஒரு நபர் மெல்லிய புன்னகையோடு கேட்டார்.

''எக்ஸ்க்யூஸ்மி... ஆர் யூ மிஸ்டர் மொகிந்தர்சிங்...?''

"நோ... நோ... ஐயாம் தன்வீர்சிங்... இதே வராந்தாவின் கோடியில் இன்னொரு சிங் இருக்கிறார்... நீங்கள் தேடி வந்தவர் அநேகமாய் அவராய் இருக்கலாம்..."

"ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்... ரிசப்ஷனில் கேட்காமல் வந்து விட்டேன்... குறுக்கே போன ரூம் பாயிடம் கேட்டதில் 'சர்தார்ஜி இந்த அறைக்குள் இருக்கிறார்' என்று சொல்லி விட்டான்... ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்..."

"இட்ஸ் ஆல் ரைட்..."

அவரை அனுப்பி விட்டு உள்ளே வந்தான்.

டையைத் தளர்த்தி விட்டு கோட்டை அகற்ற முயன்ற போது மறுபடியும் கதவுத் தட்டல் காதுகளைக் காயப்படுத்தியது.

இந்த முறை சற்று சலிப்போடு கதவைத் திறந்தான் தன்வீர்சிங்.

சப்பழிந்த முகத்தோடு தாடி மீசை ஆகியவற்றின் தடயமே இல்லாமல் மொழுமொழுவென்று ஷேவ் அடித்திருந்த கெச்சலான ஆசாமி மொச்சைப் பற்களால் - சிரித்தான்.

"வணக்கம் ஜி..."

"நீ தேடி வந்த சர்தார்ஜி நான் இல்லை... அவர் வராந்தா கடைசியில இருக்கார்..."

அவன் முகத்தில் இருந்த சிரிப்பு கொஞ்சமும் மாறாமல் அப்படியே இருந்தது.

"நான் தேடி வந்தது உங்களைத்தான்..."

"என்னையா...?"

"தன்வீர்சிங் நீங்கதானே...?"

"ஆமா..."

"நான் பார்க்க வந்தது உங்களைத்தான்..."

"என்ன விஷயம்...?"

"இப்படி வாசலில் நின்னு பேச முடியாது... உள்ளே உக்காந்து பேசலாம்..." நெற்றியைச் சுருக்கிக் கொண்டு அந்த ஆசாமிக்கு வழி விட்டான் சர்தார்ஜி.

சோபாவில் உட்கார்ந்த பின் அவன் சொன்னான்.

"நான் யாருன்னு சொன்னா நான் வந்ததுக்காக



நீங்க ரொம்ப சந்தோஷப்படுவீங்க..."

"யார் நீ...? சொல்லு..."

தொண்டையைச் செருமிக் கொண்டு அவன் வார்த்தைகளை உதிர்த்தான்.

"இந்த ஹோட்டல்ல தங்கற பெரிய மனுஷங்களுக்கு எல்லாம் பெண்கள் சப்ளை பண்ற புரோக்கர் நான்... உங்களுக்காக ஒரு ரீசார்ட் ஆல்பம் கொண்டு வந்திருக்கேன்... அத்தனையும் ஹை கிளாஸ் பொண்ணுங்க... எதைக் கூப்பிடறது எதை விடறதுன்னு நீங்க நிச்சயமா திணறப் போறீங்க... இந்தாங்க ஆல்பம்... பாருங்க..."

சொல்லிக் கொண்டே தன் கையிலிருந்த லெதர் பேகின் ஜிப்பை விரித்தவன் - அந்த கையடக்க ஆல்பத்தை எடுத்து தன்வீர்சிங்கிடம் நீட்டினான்.

தன்வீர்சிங்கின் முகம் கிறுகிறுவென்று கோபத்துக்குப் போனது.

"ஐ ஸே யூ கெட் அவுட்..."

அவனுடைய கோபத்தைக் கண்டு அந்த ஆசாமி பதறவில்லை. நிதானமாய் சிரித்துக் கொண்டே சொன்னான்.

"நீங்க அனுபவப்பட்டவர்னு நான் நினைச்சேன்... ஆனா முன் அனுபவம் இல்லாதவர்ன்னு இப்போ தெரியுது... வீணா கோபப்படாதீங்க... நான் அவ்வளவு சுலபத்தில் இந்த ஆல்பத்தை எடுத்து கிட்டு ஒரு அறைக்குள்ளே நுழைய மாட்டேன்... நான் உங்க அறைக்குள்ளே வந்திருக்கேன்னா அதுக்கு பலமான காரணம் இருக்கு..."

"என்ன காரணம்...?"

"ஆட்களை என்னால படிக்க முடியும்... அவங்க தோற்றத்தை வெச்சு... செயல்பாடுகளை வெச்சு... ஒருத்தர் எப்படிப்பட்டவர்ன்னு என்னால சொல்ல முடியும்... ரசனை உள்ளவங்க கிட்டேதான் நான் வாலண்ட்டியரா இந்த ஆலபத்தைக் காட்டுவேன்..."

"நான் ரசனை உள்ளவன்னு உனக்கு எப்படி தெரியும்...?"

"புத்தம்புது கரன்ஸி நோட்டைக் கொடுத்துட்டு மீதியைக் கூட வேண்டாம்ன்னுட்டார் அந்த சிங்

அப்படின்னு ஆட்டோ டிரைவர் வடிவேல் சொன்னான்... அதிலிருந்தே புரிஞ்சிக்க முடியுது...''

''என்ன புரிஞ்சிகிட்டே...?''

''நீங்க பணத்தை செலவழிச்சு வாழ்க்கையை ரசிக்கிற ரகம்ன்னு புரிஞ்சிகிட்டேன்... என்னோட கணக்குப்படி நீங்க பெண்ணை மறுக்கற ரகம் கிடையாது... வெளியே கோபிச்சாலும் அடிமனசில் பொண்ணைத் தொட்டு பார்க்கணும்ன்னு லேசான சபலம் இருக்கு... நான் சொல்றது சரிதானே...?''

இப்போது - தன்வீர்சிங் சிரித்தான்.

''எப்படி கரெக்டா கண்டுபிடிச்சே...?''

''எத்தனை கஸ்டமர்களை நான் பார்த்திருக்கேன்...?''

''நீ சொன்னது உண்மைதான்... பெண்களைத் தொட்டுப் பார்க்கிறதுல எனக்கு இணையா இந்த உலகத்தில் ஒரு ஆம்பிளை கிடையாது... ஆனா ப்ராஸ்டிட்யூட்களை எனக்குப் பிடிக்காது...''

''ஏன்...?''

''அவங்க முதல்ல பணத்தைப் பத்தித்தான் பேசுவாங்க... வாங்கற பணத்துக்கு தகுந்த மாதிரி ரெடிமேட் லீலைகள் வெச்சிருக்காங்க... என்னைப் பொறுத்தவரை இந்த ஆல்பப் பெண்கள் ப்ரொக்ராம் செய்யப்பட்ட ரோபாட்கள் மாதிரித்தான்... என்னை மாதிரி ரசனையுள்ள ஆளுக்கு இவங்க எல்லாம் ஒத்து வர மாட்டாங்க...''

''உங்க டேஸ்டுக்குத் தகுந்த மாதிரி குடும்பப் பொண்ணா கூட்டிட்டு வரட்டுமா...?''

''நீ கூட்டிட்டு வர்றது எப்படி குடும்பப் பொண்ணா இருக்க முடியும்...? குடும்பப் பொண்ணை எப்படி மடக்கணும்ன்னு எனக்குத் தெரியும்... இதுக்கு மேல இங்கே நின்னீன்னா போலீசைக் கூப்பிடுவேன்... ஐ ஸே யூ கெட் அவுட்...''

தன்வீர்சிங் உறுமியதும் - நடுங்கிப் போய் எழுந்தான் அந்த ஆசாமி.

ஆல்பத்தை எடுத்து தன்னுடைய தோல் பைக்குள் அடைத்துக் கொண்டு கதவுக்குப் பின் வாங்கி சட்டென்று வெளியேறிச் சென்றான்.



ஆசாமி சென்றதும் கப்போர்டு பூராவும் தேடி அந்த 'Dont Disturb Me' கார்டைப் பிடித்தான்.

கதவுக்கு வெளியே அதை மாட்டி விட்டு கதவை அறைந்து சாத்தினான்.

''இனிமேல் எவனும் கதவைத் தட்ட மாட்டான்!''

சர்தார்ஜி இறுக்கமான கோட்டைக் கழற்றி எறிய - உள்ளே சல்வார் கமீஸ். அடுத்து டர்பனைக் கழற்ற அழகான பாப் கேசம் அவிழ்ந்து விழுந்தது. பாத்ருமுக்குள் நுழைந்தது.

உடைகளைப் பூராவும் களைந்து விட்டு அரை மணி நேரம் ஷவரின் குளிர்ந்த நீர்த் திவலைகளில் ஆசுவாசமானாள்.

'... நான் ரசனை உள்ள ஆம்பளையாம்! தோற்றத்தைப் பார்த்தே கண்டு பிடித்து விட்டானாம்...'

சற்று முன் வந்த பிம்ப்பை திட்டிக் கொண்டே டவலை இழுத்தாள். சோப்பு வாசனையுடன் இருந்த உடம்பை நிதானமாய் ஒற்றிக் கொண்ட பின் - மாக்சியை தலை வழியே மாட்டிக் கொண்டு - டி.வி.யை ஆன் செய்து - ஃபோமில் பொத்தென்று விழுந்தாள்.

'... இனி நாளை காலை வரை ஒட்டு தாடி மீசை இல்லாமல், இறுக்கமான சர்தார்ஜி உடை இல்லாமல், கஷ்டப்பட்டு ஆண்மை கலந்த கட்டைக் குரலில் பேசாமல், நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் இருக்கலாம்!'

தனக்குள் நினைத்துக் கொண்டாள் - அத்தனை நேரம் தன்வீர்சிங்காக இருந்த மாலினி.

## 3

டைரக்டர் நட்வர்லால் சோப்ராவின் இருண்ட முகத்தைத் திகைப்புடன் பார்த்தார்.

''என்ன சொல்கிறீர்கள்... பத்து நாள் அவகாசம் போதாதா...?''

''பத்து நாளைக்குள் இந்த கம்ப்யூட்டர்

கண்ட்ரோல்களை சரிப்படுத்தி விட முடியும் என்று பிரதமரிடம் எந்த நம்பிக்கையில் உறுதி கூறினீர்கள்...?''

''ஏன்...?''

''பத்து நாட்கள் இல்லை... இன்னும் பத்தாயிரம் நாட்கள் ஆனாலும்... இந்தச் சிக்கலை நாம் தீர்ப்பது கடினம்தான்...''

''எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்...?''

''இந்த சிக்கலைத் தீர்ப்பதற்குரிய கம்ப்யூட்டர் தொழில் நுட்பம் நம்மிடம் இல்லை என்ற கசப்பான உண்மையை ஒத்துக் கொள்ளத்தானே வேண்டும்...''

''மிஸ்டர் சோப்ரா...! உங்கள் தலைமையின் கீழ் நூறு பேர் கொண்ட மிகச் சிறந்த கம்ப்யூட்டர் வல்லுநர்கள் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்...! அதை மறந்து விட்டீர்களா...?''

''ஸாரி... நாம் எதிர்பார்க்கும் மிகத் துல்லியமான கண்ட்ரோல்களுக்கு மிக உயர்ந்த தொழில் நுட்பம் தேவை... ஆனால் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளை விட பத்துப் பதினைந்து வருஷங்கள் பின்னால் இருக்கிறோம்... மேலும் காலாவதியான தொழில் நுட்பங்களைத்தான் குப்பையைத் தூக்கி எறிவது போல நமக்குப் பிச்சை போடுகிறார்கள் அவர்கள்... அவைகளைத் தோண்டித் துருவி அதற்கு மேல் சாதிக்க முயன்றால் அந்த முயற்சியில் அறுபது சதவீதம் வரைக்கும் தான் வெற்றி காண முடிகிறது... முயன்று பார்த்தோம்... ஆனால் முடியவில்லை...''

''இப்போது என்னதான் செய்வது...? பாதிக் கிணறு தாண்டின நிலையில் இருக்கிறோம்... பிரதமரிடம் மீண்டும் சமாதானம் சொல்ல வாய்ப்பே இல்லை... எப்பாடு பட்டாவது திட்டமிட்டபடி ராக்கெட்டைச் செலுத்தி ஆக வேண்டும்... ஏதாவது வழி உள்ளதா...?''

''ஒரே வழிதான் உள்ளது...''

''என்ன...?''

''டெக்னாலஜியை அமெரிக்க நாசாவிடம் இரவல் கேட்க வேண்டியதுதான்...''

''அவர்கள் லேட்டஸ்ட் டெக்னாலஜியை நமக்கு



அளிக்க மாட்டார்கள்...''

''அரசு நம்முடைய ஆராய்ச்சித் துறைக்காக ஏராளமான தொகை ஒதுக்கியுள்ளது... அமெரிக்கா பணக்கார நாடாக இருந்தாலும் வளரும் நாடுகளிலிருந்து பணத்தைக் கறப்பதில் அது அசாத்திய ஆர்வம் காட்டும்... ஒருவேளை பணத்துக்காக டெக்னாலஜியைத் தாரை வார்க்க முன்வரலாம்...''

''எனக்கு நம்பிக்கை இல்லை சோப்ரா... அரசியல் ரீதியாகப் பேச்சு வார்த்தை நடத்தித்தான் டெக்னாலஜி பரிமாற்றத்தை சாதிக்க முடியும்... பிரதமரிடம் மறுபடி போய் நிற்க முடியாது...''

''டெக்னாலஜியை அவர்கள் நமக்குத் தராவிட்டால் பரவாயில்லை... அவர்களின் கம்ப்யூட்டர் வல்லுநர்கள் காண்ட்ராக்ட் ஓர்க்காக இந்த வேலையை செய்து தந்து விட்டுப் போகலாமே...? இதற்காக அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடத்திப் பாருங்கள்...''

நட்வர்லாலின் முகத்தில் லேசாகப் பளபளப்பு பிறந்தது.

''இது நல்ல யோசனையாக எனக்குப் படுகிறது... ஒரு பிசினஸ் டாக்கிற்கு நேரம் ஒதுக்கச் சொல்லி இந்த நிமிஷமே இண்ட்டர்நெட் மூலமாக செய்தி அனுப்பி வைக்கிறேன்...''

நட்வர்லாலும், சோப்ராவும் அரை மணி நேரத்திற்கு மேல் அந்த அறைக்குள் டெலிபோனுக்கு முன்னால் காத்துக் கொண்டிருக்க - மவுனமாய் இருந்த டெலிபோன் அந்த விநாடி குரலைத் திறந்தது.

ரிசீவரை எடுத்தார் நட்வர்லால்.

''ஹலோ... டைரக்டர் ஆஃப் ஐ.எஸ்.ஆர்.ஓ. ஸ்பீக்கிங்...''

''நாசாவிலிருந்து ஜான்ஸன் பேசுகிறேன்...''

''நாங்கள் அனுப்பிய இன்டர்நெட் செய்தியை ரிசீவ் பண்ணிக் கொண்டீர்களா...?''

''எஸ்...''

''மிஸ்டர் ஜான்ஸன்... இந்தியா இப்போது ஆழ்ந்த

கண்ட்ரோல்களை சரிப்படுத்தி விட முடியும் என்று பிரதமரிடம் எந்த நம்பிக்கையில் உறுதி கூறினீர்கள்...?''

''ஏன்...?''

''பத்து நாட்கள் இல்லை... இன்னும் பத்தாயிரம் நாட்கள் ஆனாலும்... இந்தச் சிக்கலை நாம் தீர்ப்பது கடினம்தான்...''

''எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்...?''

''இந்த சிக்கலைத் தீர்ப்பதற்குரிய கம்ப்யூட்டர் தொழில் நுட்பம் நம்மிடம் இல்லை என்ற கசப்பான உண்மையை ஒத்துக் கொள்ளத்தானே வேண்டும்...''

''மிஸ்டர் சோப்ரா...! உங்கள் தலைமையின் கீழ் நூறு பேர் கொண்ட மிகச் சிறந்த கம்ப்யூட்டர் வல்லுநர்கள் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்...! அதை மறந்து விட்டீர்களா...?''

''ஸாரி... நாம் எதிர்பார்க்கும் மிகத் துல்லியமான கண்ட்ரோல்களுக்கு மிக உயர்ந்த தொழில் நுட்பம் தேவை... ஆனால் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளை விட பத்துப் பதினைந்து வருஷங்கள் பின்னால் இருக்கிறோம்... மேலும் காலாவதியான தொழில் நுட்பங்களைத்தான் குப்பையைத் தூக்கி எறிவது போல நமக்குப் பிச்சை போடுகிறார்கள் அவர்கள்... அவைகளைத் தோண்டித் துருவி அதற்கு மேல் சாதிக்க முயன்றால் அந்த முயற்சியில் அறுபது சதவீதம் வரைக்கும் தான் வெற்றி காண முடிகிறது... முயன்று பார்த்தோம்... ஆனால் முடியவில்லை...''

''இப்போது என்னதான் செய்வது...? பாதிக் கிணறு தாண்டின நிலையில் இருக்கிறோம்... பிரதமரிடம் மீண்டும் சமாதானம் சொல்ல வாய்ப்பே இல்லை... எப்பாடு பட்டாவது திட்டமிட்டபடி ராக்கெட்டைச் செலுத்தி ஆக வேண்டும்... ஏதாவது வழி உள்ளதா...?''

''ஒரே வழிதான் உள்ளது...''

''என்ன...?''

''டெக்னாலஜியை அமெரிக்க நாசாவிடம் இரவல் கேட்க வேண்டியதுதான்...''

''அவர்கள் லேட்டஸ்ட் டெக்னாலஜியை நமக்கு



அளிக்க மாட்டார்கள்...''

''அரசு நம்முடைய ஆராய்ச்சித் துறைக்காக ஏராளமான தொகை ஒதுக்கியுள்ளது... அமெரிக்கா பணக்கார நாடாக இருந்தாலும் வளரும் நாடுகளிலிருந்து பணத்தைக் கறப்பதில் அது அசாத்திய ஆர்வம் காட்டும்... ஒருவேளை பணத்துக்காக டெக்னாலஜியைத் தாரை வார்க்க முன்வரலாம்...''

''எனக்கு நம்பிக்கை இல்லை சோப்ரா... அரசியல் ரீதியாகப் பேச்சு வார்த்தை நடத்தித்தான் டெக்னாலஜி பரிமாற்றத்தை சாதிக்க முடியும்... பிரதமரிடம் மறுபடி போய் நிற்க முடியாது...''

''டெக்னாலஜியை அவர்கள் நமக்குத் தராவிட்டால் பரவாயில்லை... அவர்களின் கம்ப்யூட்டர் வல்லுநர்கள் காண்ட்ராக்ட் ஒர்க்காக இந்த வேலையை செய்து தந்து விட்டுப் போகலாமே...? இதற்காக அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடத்திப் பாருங்கள்...''

நட்வர்லாலின் முகத்தில் லேசாகப் பளபளப்பு பிறந்தது.

''இது நல்ல யோசனையாக எனக்குப் படுகிறது... ஒரு பிசினஸ் டாக்கிற்கு நேரம் ஒதுக்கச் சொல்லி இந்த நிமிஷமே இண்டர்நெட் மூலமாக செய்தி அனுப்பி வைக்கிறேன்...''

நட்வர்லாலும், சோப்ராவும் அரை மணி நேரத்திற்கு மேல் அந்த அறைக்குள் டெலிபோனுக்கு முன்னால் காத்துக் கொண்டிருக்க - மவுனமாய் இருந்த டெலிபோன் அந்த விநாடி குரலைத் திறந்தது.

ரிசீவரை எடுத்தார் நட்வர்லால்.

''ஹலோ... டைரக்டர் ஆஃப் ஐ.எஸ்.ஆர்.ஓ. ஸ்பீக்கிங்...''

''நாசாவிலிருந்து ஜான்ஸன் பேசுகிறேன்...''

''நாங்கள் அனுப்பிய இன்டர்நெட் செய்தியை ரிசீவ் பண்ணிக் கொண்டீர்களா...?''

''எஸ்...''

''மிஸ்டர் ஜான்ஸன்... இந்தியா இப்போது ஆழ்ந்த

சிக்கலில் இருப்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன்... ஏற்கெனவே அறிவித்த தேதியில் ராக்கெட்டை வெற்றிகரமாக விண்ணில் செலுத்த முடியவில்லை... பிரதமர் உட்பட உயர் அமைச்சர்கள் கோபத்தில் இருக்கிறார்கள்..."

"உங்களின் பெரிய முயற்சி தோல்வியில் முடிந்ததற்கு என் அனுதாபங்கள்..."

"பிரதமரிடம் பத்து நாட்கள் அவகாசம் கேட்டிருக்கிறேன்... பதினோராவது நாள் ராக்கெட் விண்ணில் பறந்தாக வேண்டும்..."

"எப்படி இதைச் சாதிக்கப் போகிறீர்கள்...?"

"அதற்காகத்தான் உங்கள் உதவி தேவைப்படுகிறது மிஸ்டர் ஜான்ஸன்..."

"நான் என்ன செய்ய வேண்டும்...?"

"உடனடியாக உங்களிடம் நவீன சூப்பர் கம்ப்யூட்டர் டெக்னாலஜி பரிமாற்றம் செய்து கொள்ள விரும்புகிறோம்..."

மறுமுனை ஜான்ஸன் மெல்லிய சிரிப்பு ஒன்றைப் பிரசவித்தார்.

"உங்களுக்கு அமெரிக்க அரசின் சட்ட திட்டங்கள் தெரியாததல்ல..."

"தெரியும்! எவ்வளவு பில்லியன் டாலர் எதிர்பார்க்கிறீர்கள்...?"

"பணம் முக்கியம் இல்லை... லேட்டஸ்ட் டெக்னாலஜிகளை என்ன விலை கொடுத்தாலும் அடுத்த நாடுகளுக்குத் தருவதில்லை என்பது அரசின் பிடிவாதமான கொள்கை..."

"உங்கள் சட்டங்களில் எங்காவது லூப் ஹோல் இருக்கிறதா என்று பாருங்கள் ப்ளீஸ்... நாங்கள் இப்போது நாட்டின் கவுரவத்தைக் காப்பாற்ற வேண்டிய மிக இக்கட்டான தருணத்தில் இருக்கிறோம்..."

"ஆராய்ச்சி முழுமை அடைவதற்குள் சாதித்து விட்டதைப் போல ஏன் அறிவிக்கிறீர்கள்... பேசாமல் தோல்வியை ஒப்புக் கொண்டு விடுங்களேன்...!"

"பிரதமர் அதை விரும்ப மாட்டார்... உலக அரங்கில் இந்தியாவுக்கு அது தலைகுனிவாக



இருக்கும்... தவறுகளைக் கடைசி நிமிஷத்தில்தான் கண்டு பிடித்தோம்..."

"நீங்களாக ஏற்படுத்திக் கொண்ட இக்கட்டான நிலைமைக்கு நாங்கள் என்ன செய்ய முடியும்... நீங்கள் கேட்கும் லேட்டஸ்ட் டெக்னாலஜியை இப்போதைக்கு தர முடியாது..."

"அப்படியானால் இன்னொரு உதவி செய்யுங்கள்..."

"என்ன உதவி...?"

"எங்களுக்கு டெக்னாலஜி ரகசியங்கள் எதையும் வெளிப்படுத்த வேண்டாம்... உங்கள் விஞ்ஞானிகளை அனுப்பி வையுங்கள்... பணிகளை அவர்கள் முடித்துத் தரட்டும்... அதற்குரிய விலையை நாங்கள் தருகிறோம்..."

ஜான்ஸனிடம் இருந்து பெரிய சிரிப்பு வெளியானது.

"அப்படி செய்தால் முழுக்க முழுக்க இந்தியா சொந்தமாக உருவாக்கி செலுத்திய ராக்கெட் என்று பெருமை கொள்ள முடியாதே... மேலும் டாலர்கள் நிறைய செலவாகும்."

"உங்கள் ஒத்துழைப்பை ரகசியமாக எங்களுக்குத் தாருங்களேன்... டாலர்கள் செலவாவதைப் பற்றி நாங்கள் இப்போது கவலைப்படவில்லை..."

"ஸாரி... அது முடியாது... தவிர அப்படிச் செய்து கொடுப்பது நவீன தொழில் நுட்பத்தை மறைமுகமாகத் தாரை வார்ப்பதற்குச் சமம்...உங்கள் விஞ்ஞானிகள் எள்ளைக் கொடுத்தால் எண்ணெய் ஆக்கி விடுவார்கள்... அது முடியாது..."

"சரி! லேட்டஸ்ட் சூப்பர் கம்ப்யூட்டரை எங்களுக்கு விற்க முடியுமா...?"

"அதுவும் சாத்தியமில்லை... இன்னும் பத்து வருடங்களுக்குப் பிறகுதான் இப்போதைய லேட்டஸ்ட் கம்ப்யூட்டரை சந்தையில் வைப்போம்..."

ஒரு மணி நேரம் டெலிபோனில் மாறி மாறிக் கேட்டுப் பார்த்தும் நாசாவின் ஜான்ஸன் பிடி கொடுக்காமல் நழுவினார்.

ரிசீவரை ஏமாற்றத்தோடு சாத்திய நட்வர்லாலைக் கவலையோடு கேட்டார் சோப்ரா.

''என்ன சொன்னார்கள்...?''

''கையை விரித்து விட்டார்கள்...''

''என்ன செய்யப் போகிறோம்...? எப்படி பத்து நாளைக்குள் கன்ட்ரோலை சரிப்படுத்தி ராக்கெட்டைச் செலுத்த முடியும்...?''

நெற்றியில் பலமாய்ச் சுருக்கங்கள் விழ -

தலையில் கையை வைத்தபடி -

எதுவுமே பேசத் தோன்றாமல் கவலை அடர்த்தியாய்ப் பரவின முகங்களோடு இருவரும் உட்கார்ந்திருந்தார்கள்.

## 4

ஏர்போர்ட் லவுன்ஞ் பரபரப்பைத் தத்தெடுத்து இருந்தது.

நியூயார்க்கிலிருந்து வந்து சேர்ந்திருந்த விமானம் ரன்வேயில் இறங்கும் முஸ்தீபுகளோடு ஏர்போர்ட்டுக்கு மேலே வட்டமடித்துக் கொண்டிருந்தது.

யாரோ ஒரு அமைச்சருக்காகக் காத்திருந்த கரை வேஷ்டி ஆசாமிகள் ''தமிழினத்தைக் காக்க நியூயார்க் சென்று திரும்பிய தன்மானச் சிங்கமே, வருக வருக...'' என்று துணி பேனர் பிடித்திருந்தார்கள். 'வாழ்க ஒழிக' கோஷத்தைத் தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருந்தார்கள்.

தடுப்புக் கண்ணாடிக்கு அருகே ஆவலான முகங்களோடு சில குடும்பங்கள் முடிச்சு முடிச்சாய் நின்றிருந்தன. பர்தா அணிந்த பெண்களுடன் ஒரு குடும்பம். மலையாளத்தில் சம்சாரித்தபடி மற்றொரு குடும்பம்.

மார்பிள் பதித்த அந்தத் தூண் அருகே அவ்வளவாய்ப் பரபரப்பில்லாமல் நின்றிருந்த கனகவல்லி, வேதாசலம் ஆகிய இருவரும் நம் கவனத்திற்கு உரியவர்கள்.

வேதாசம் பருத்தி நிறத்தில் மொடமொடப்பாய்



வேஷ்டி சட்டை உடுத்தியிருந்தார். பின் மண்டையில் வழுக்கை பளபளத்தது. அவருக்கருகே நின்றிருந்த அவர் மனைவி கனகவல்லி காதோரங்களில் மட்டும் தலை நரைத்திருக்க - காட்டன் புடவையை உடலுக்குச் சுற்றியிருந்தாள்.

வேதாசலம் கேட்டார்.

'' 'உங்களால பெரிய உதவி ஆகனும்'ன்னு அமெரிக்காவிலிருந்து வர்ற உன்னோட தோழி சந்திரா லெட்டர்ல எழுதியிருந்தாங்க... என்ன உதவின்னு போன்ல பேசறப்ப கேட்டியா...?''

''கேட்டேன்... ஆனா அவ சொல்ல மறுத்துட்டா... 'நேரில் வந்து விபரமா சொல்றேன்'னு சொன்னா...''

''என்ன விஷயமா இருக்கும்...?''

''என்னால யூகிக்க முடியலை...''

''இருபது வருஷங்களுக்கு மேலா அமெரிக்காவில் இருக்காங்கன்னு சொன்னே... அமெரிக்க வாழ்க்கை போர் அடிச்சுப் போய்... இங்கே லேண்ட் வாங்கி வீடு கட்டி இங்கேயே செட்டில் ஆயிடலாம்ங்கற எண்ணத்தோட வந்திருக்கலாமோ...?''

''இருக்கலாம்... நான் அவளை ஆனவரைக்கு கேட்டேன்... 'உன்னால செய்ய முடிஞ்ச உதவிதான்... அதுவும் சந்தோஷமான விஷயம்தான்... இன்னும் ரெண்டு நாளில் நேரில் வந்துடுவேன்... வந்த பிறகு விபரமா பேசிக்கலாம்'ன்னு சொன்னா...''

''அதோ ஃப்ளைட் லேண்ட் ஆயிட்டிருக்கு... இன்னும் பத்து நிமிஷத்தில் உன் தோழி சந்திராவை நேரிலேயே பார்த்துடலாம்...''

அவர் சொன்ன போது அந்த அமெரிக்க விமானம் ஏராளமான இரைச்சலோடு ரன்வேயை முத்தமிட்டது.

அதன் வயிற்றிலிருந்து வெளிப்பட்ட படிக்கட்டுகளில் பிரயாணிகள் இறங்கி வரத் துவங்கினார்கள்.

கனகவல்லி அந்தப் பிரயாணிகளிடையே சந்திராவின் முகத்தைத் தேடினாள்.

சந்திரா சின்தெட்டிக் புடவைக்குத் தன்னைக் கொடுத்திருந்தாள். நாசிக்கு மேலே மெல்லிய பவர் கிளாஸ் உட்கார்ந்திருந்தது.

கனகவல்லி அவளைக் கட்டிக் கொண்டாள்.

''சந்திரா... அடையாளமே தெரியாத அளவுக்கு குண்டாயிட்டேடி...''

''நீ காலேஜில் படிக்கறப்போ எப்படி இருந்தியோ அதே மாதிரி துடி இடை கனகவல்லியா இப்பவும் இருக்கேன்னு நினைப்பா... வயசு நாப்பது ஆச்சுன்னு உன்னோட தலை நரையிலிருந்து கண்ணுக்குக் கீழே இருக்கற கருவளையம் வரைக்கும் காட்டிக் கொடுத்துட்டுதானே இருக்கு...'' சந்திரா சொல்ல கனகவல்லி குறுக்கிட்டாள்.

''தெருவுக்கு தெரு பியூட்டி பார்லர் இருக்கு... இதையெல்லாம் மறைக்கறது இப்போ பெரிய விஷயம் இல்லை... ஆனா மகன் மருமகள் முன்னால இப்படி நரைச்ச தலையோட நின்னாத்தான் கவுரவமா இருக்கும்...''

வேதாசலம் சிரித்துக் கொண்டே குறுக்கிட்டார்.

''அமெரிக்கா என்ன சந்திர மண்டலத்துக்கே போனாலும் நம்ம பெண்கள் மாற மாட்டாங்க போலிருக்கு... எவ்வளவோ வருஷம் கழிச்சு ஒருத்தரை ஒருத்தர் பார்க்கறீங்க... நல்லா இருக்கியா...? வீட்டில் எல்லாரும் நல்லா இருக்காங்களா... ? இந்த மாதிரி விசாரிச்சா அது நியாயமா இருக்கும்... வந்ததும் வராததுமா உங்க அழகைப் பத்தி பேச ஆரம்பிச்சிட்டீங்களே...?''

''சந்திரா... இவர் என்னோட ஹஸ்பெண்ட்...''

அவள் புன்னகையுடன் கையைக் கூப்பினாள்.

''வணக்கம் அண்ட் ஸாரி ஸார்... காலேஜ் படிக்கறப்போவே நாங்க ரெண்டு பேரும் மார்க்கெட்ல புதுசா எந்த ஃபேஸ் க்ரீம் வந்திருக்குன்னு துப்பறிஞ்சிட்டிருப்போம்... இன்னும் அந்தப் பழக்கம் விடலை...''

''வாங்க காருக்குப் போவோம்... கார்ல போகப் போக மத்த கதையெல்லாம் பேசுங்க...''

''நாங்க பேச ஆரம்பிச்சோம்னா ஒண்ணு உங்களுக்கு போர் அடிக்கும்... அல்லது... இந்த வயசில் இப்படிப் பொறுப்பில்லாம அரட்டை அடிக்கறாங்களேன்னு கோபம் வரும்... இன்னும்



மூணு மாசத்துக்கு இங்க தானே இருக்கப் போறேன்... நாங்க ரெண்டு பேரும் பேசிக்கறதுக்கு எவ்வளவோ நேரம் கிடைக்கும்...''

லவுஞ்சை விட்டு வெளியே வந்து - அந்த டாட்டா எஸ்டேட்டின் பின் பக்கம் லக்கேஜ்களை ஏற்றினார்கள். டிரைவர் எஞ்சினை உறும விட்டு காரை இயக்கத்துக்குக் கொண்டு வந்தார்.

கார் நகர ஆரம்பித்ததும் வேதாசலத்தைப் பார்த்து சந்திரா கேட்டாள்.

''உங்களுக்கு ரெண்டு பசங்க... இல்லையா...?''

''ஆமா...''

''என்ன பண்றாங்க...?''

''ஒருத்தன் சொந்தமா பிசினஸ் பண்ணிட்டிருக்கான்... இன்னொருத்தன் கவர்மெண்ட் ஆஸ்பிட்டல்ல டாக்டரா இருக்கான்... ஆர்த்தோ ஸ்பெஷலிஸ்ட்...''

''ரெண்டு பேர்க்கும் கல்யாணம் ஆயிடுச்சா...?''

''ஆயிடுச்சு... உங்களுக்கு ஒரு டாட்டர்தானே...?''

''ஆமா...''

''ஹஸ்பெண்ட் இறந்துட்டார்ன்னு கனகவல்லி சொன்னா...''

''ஆமா... ஒரு கார் ஆக்சிடெண்ட்டில்...''

''பொண்ணு என்ன படிக்கறா...?''

''ஸ்கூல் ஆஃப் மேனேஜ்மெண்ட்டில் போஸ்ட் கிராஜுவேஷன் பண்ணிட்டிருக்கா... இது அவளுக்கு ஃபைனல் இயர்...''

''நீங்க என்ன வேலை பார்க்கறீங்க...?''

''நான் வேலைக்குப் போகலை... குழந்தைகள் காப்பகம் மாதிரி ஒரு அமைப்பை சொந்தமா வெச்சு நடத்திட்டு வர்றேன்... வேலைக்குப் போற தம்பதிகள் அங்கே அதிகம்... அவங்களோட குழந்தைகளைப் பார்த்துக்கறதுக்காக காப்பகம் நடத்திட்டு வர்றேன்...''

டாட்டா எஸ்டேட் துடைத்து வைத்த நெடுஞ்சாலையில் விரைந்து கொண்டிருக்க - கனகவல்லி குறுக்கிட்டாள்.

''இந்த விபரமெல்லாம் என்னைக் கேட்டா நானே சொல்ல மாட்டேனா...? அவ என்னவோ சஸ்பென்ஸ் வெச்சு லெட்டர் எழுதியிருந்தாளே... முதல்ல அதைப்பத்தி அவகிட்டே கேளுங்க...''

வேதாசலம் சிரித்தார்.

''ஆமா... அதைக் கேக்காம நான் வேற என்னென்னவோ பேசிட்டிருக்கேனே. மிஸஸ் சந்திரா... நாங்க ஏதோ உதவி செய்யணும்னு சொன்னீங்களே... என்ன உதவின்னு இப்பவாவது நாங்க தெரிஞ்சிக்கலாமா...?''

புன்னகைத்தாள் சந்திரா.

''பெரிய விஷயம் எதுவும் இல்லை... ரொம்ப சாதாரண விஷயம்தான்...''

''என்னன்னு சொல்லுங்க...''

''என்னோட பொண்ணு லிசா இந்தியாவைச் சேர்ந்த மாப்பிள்ளையைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு சொல்றா... அவளுக்கு அமெரிக்க கலாசாரம் பிடிக்கலை... நான் மூணு மாசம் இங்கே தங்கியிருந்து ஒரு நல்ல மாப்பிள்ளையை அவளுக்காகப் பார்த்து முடிவு பண்ணிட்டுப் போகணும்... அதுக்காகத்தான் இங்கே வந்தேன்... குடும்பத்தைப் பகைச்சிட்டு நான் லவ் மேரேஜ் பண்ணிகிட்டதால சொந்தக்காரங்க யாரும் எனக்கு உதவ மாட்டாங்க... இந்தியாவில் ரொம்ப நெருக்கமான தோழி கனகவல்லி தான்... அதனால இந்த மாப்பிள்ளை பார்க்கும் விஷயத்தில் நீங்கதான் உதவணும்...''

''இவ்வளவுதானா...?'' கனகவல்லி 'உச்' கொட்ட

-

வேதாசலம் கேட்டார்.

''உங்க கண்டிஷன்ஸ் என்ன...?''

''மாப்பிள்ளை நல்ல குணமுள்ளவரா இருக்கணும்... படிச்சவரா இருக்கணும்... வேற எதையும் நான் எதிர்பார்க்கலை... என்னால பொண்ணுக்கு ரெண்டு லட்ச ரூபாய் வரைக்கும் சீர்வரிசை செய்ய முடியும்...''

''இன்ன வகுப்பைச் சேர்ந்த மாப்பிள்ளை



யைத்தான் பார்க்கணும்ன்னு முடிவு பண்ணி இருக்கீங்களா...?''

''நோ... நோ... ஜாதி... மதம் இதெல்லாம் ஒரு பொருட்டில்லை...''

''அப்படின்னா கவலையை விடுங்க... எனக்குத் தெரிஞ்ச ஒரு தரகர் இருக்கார்...''

''தரகரா...? வேண்டாம். நான் அங்கிருந்துகிட்டே பத்திரிகையில் விளம்பரம் பண்ணியிருக்க முடியும்... அல்லது யாராவது தரகர் மூலமா பார்த்திருக்க முடியும்... அந்த வழிமுறைகள் வேண்டாம்ன்னு நினைச்சுத்தான் நான் நேரிலேயே வந்தேன்... உங்களுக்குத் தெரிஞ்ச சர்க்கிள்ல விசாரிச்சுப் பார்த்து மாப்பிள்ளை தேடலாம்...''

''ஏன் தரகர் வேண்டாம்ன்னு சொல்றீங்க...?''

''ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கல்யாணத்தைப் பண்ணி வெச்சிடணும்ன்னு அவங்க நினைப்பாங்க... இந்த பாலிசி சில சமயம் சின்னஞ்சிறிசுகளின் வாழ்க்கையையே நாசமாக்கற அளவுக்குப் போயிடும்...''

சிரித்தார் வேதாசலம்.

''நான் சொல்ற தரகர் அப்படிப் பட்டவர் அல்ல... அந்த பாலிசிக்கு விரோதமானவர்... ரொம்ப நேர்மையானவர்... எதையும் மிகைப்படுத்தாம குறைச்சும் சொல்லாம குடும்பங்களை இணைச்சு வெப்பார்... அது மட்டுமில்லை... நாம சொல்ற விபரங்கள் சரிதானான்னு உறுதிப்படுத்திகிட்டுத்தான் நம்மைப்பத்தி அடுத்தவங்க கிட்டே பேசுவார்... அதே மாதிரி இலையில் வைக்கற ஊறுகாயிலிருந்து கழுத்தில் போடற நகை வரைக்கும் ஒரு விஷயம் விடாம ரெண்டு பேரையும் உக்கார வெச்சு முன் கூட்டியே பேசி முடிச்சிடுவார்... அதனால பின்னாடி எந்த சச்சரவும் எழ வாய்ப்பே இருக்காது... நீங்க அந்தத் தரகரை நம்பலாம் மிஸஸ் சந்திரா...''

''ஓக்கே... நீங்க சொன்னா சரிதான்...'' என்றபடியே ஜன்னலைப் பார்த்தவள் புருவங்கள் சுருங்கக் கேட்டாள். ''என்ன கார் சிட்டியை விட்டு எங்கேயோ

போய்ட்டிருக்கு...? நாம வீட்டுக்குப் போகலையா...?"

கனகவல்லி குறுக்கிட்டுச் சொன்னாள்.

"நாம இப்போ ஃபார்ம் ஹவுஸுக்குப் போறோம்... அங்கேதான் சந்தடி இல்லாம பீஸ்ஃபுல்லா இருக்கும்... நீ ரெஸ்ட் எடுக்க சவுகரியமா இருக்கும்..."

இருபுறமும் பசேலென்று விளைந்திருந்த பண்ணைக்குள் கார் பிரவேசித்தது.

பண்ணையின் மையத்தில் மேடான இடத்தில் அழகான ஃபார்ம் ஹவுஸ்.

அங்கே சென்று கார் நிற்க - காரை விட்டுக் கீழே இறங்கிய சந்திரா சிலுசிலு வென்று முகத்தைத் தடவிய காற்றை வாங்கிக் கொண்டு -

"ப்யூட்டிஃபுல்..." என்றாள்.

சற்றுத் தொலைவில் - அடர்த்தியான புளியமரத்திற்குப் பின்னால் சர்தார்ஜி வேடத்தில் இருந்த மாலினி சந்திராவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

## 5

ஐ.எஸ்.ஆர்.ஓ. வின் விஸ்தாரமான கான்பரன்ஸ் ஹால் ஏர் - கண்டிஷன் குளிர்ச்சியில் இருந்தது.

டைரக்டர் நட்வர்லால் மையமான இருக்கையில் உட்கார்ந்திருக்க - அவருக்கு அருகில் கம்ப்யூட்டர் பிரிவின் தலைமை விஞ்ஞானி சோப்ரா அமர்ந்திருந்தார்.

எதிரே ஒழுங்கான வரிசையில் போடப்பட்ட பாலிமர் நாற்காலிகளில் கம்ப்யூட்டர் துறையின் இளம் விஞ்ஞானிகள் நட்வர்லாலின் முகத்தையே பார்த்தபடி அமர்ந்திருந்தார்கள்.

எல்லோரும் வந்து அமரும் வரை கடும் மவுனம் நிலவியது.

நட்வர்லால் தனக்கு எதிரே தலையைத் தாழ்த்தி இருந்த மைக்கின் முன்னால் உதடுகளைக் குவித்து நிசப்தத்தை உடைத்தார்.

"ஒரு சிக்கலான நிலைமையில் இந்த கான்பரன்ஸ்



கூட்டப்பட்டு உள்ளது... இங்கே கலந்து கொண்டிருப்பவர்கள் யார் யார் என்பதைப் பார்த்தாலே சிக்கல் எங்கே என்பதை உங்களால் யூகம் செய்ய முடியும்..."

சொல்லி நிறுத்தி விட்டு நட்வர்லால் முன்னே அமர்ந்திருந்தவர்களைப் பார்க்க - அவர்களில் ஒருவர் தயங்கிக் கொண்டே கேட்டார்.

"கம்ப்யூட்டர் டிபார்ட்மென்டில் உள்ளவர்களை மட்டும் அவசரக் கூட்டத்துக்காக கூட்டியிருக் கிறீர்கள்... எங்கள் டிபார்ட்மென்ட்டில்தான் ஏதோ பிரச்னை என்று தெரிகிறது... நான் சொல்வது சரிதானே ஸார்...?"

"மிகச் சரி..."

"என்ன பிரச்னை ஸார்...?"

"டெக்னிக்கல் எரர் என்று பத்திரிகையாளர்களிடம் அஃபிஷியலாய் அறிவித்து விட்டு ராக்கெட் செலுத்தும் தேதியை ஒத்தி வைத்து இருக்கிறோம். பிரச்னை நம் சூப்பர் கம்ப்யூட்டரில்தான் இருக்கிறது... கணக்கீடுகள் எவ்வளவுக்கு எவ்வளவு துல்லியமாய் அமைகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு நம்பிக்கையோடு ராக்கெட்டை செலுத்த முடியும்... கணக்கீடுகள் துல்லியமாய் இருந்தால் அநாவசிய பண விரயங்கள் தவிர்க்கப்படும்... அதனால் தான் இந்தக் கணக்கீடுகளுக்காக இதுநாள் வரை அந்நிய நாடுகளின் துணையை நாடி வந்தோம்... இப்போது முழுக்க முழுக்க நாமே தயாரித்து அனுப்பப் போகும் ராக்கெட் இது என்று ஜம்பமாக அறிவித்து விட்டு கம்ப்யூட்டர் பிரச்னையில் தடுமாறிக் கொண்டு இருக்கிறோம்..."

"ட்ரையல் கால்குலேஷன்கள் அனைத்தும் சரியாக இருந்தனவே ஸார்...?"

"இல்லை... எங்கோ நாம் கோட்டை விட்டிருக்கிறோம்... ஸாஃப்ட்வேர் எழுதியதில் ஏதோ கோளாறு இருக்கிறது..."

ஒரு சாஃப்ட்வேர் நிபுணர் எழுந்து நின்றார்.

"நான் சாஃப்ட்வேரை 'டீபக்' செய்து தவறு எங்கே என்று கண்டு பிடித்து சரி செய்கிறேன் ஸார்..."

''நிகழ்ந்திருப்பது லாஜிக்கல் எரர்... அதைக் கண்டுபிடித்து சரி செய்ய எத்தனை நாள்கள் பிடிக்கும் என்று திட்டமிட முடியாது... தற்போது காத்திருக்க நேரம் இல்லை... பத்து நாட்களுக்குள் தவறுகளை சரி செய்து ராக்கெட்டை விண்ணில் ஏவப் போகிறோம் என்று பிரதமரிடம் வாக்குறுதி கொடுத்தாயிற்று...''

சோப்ரா தொண்டையைக் கனைத்தார்.

''டைரக்டர் ஸார்... நடந்த விஷயங்களை எவ்வளவு நேரம்தான் பேசிக் கொண்டிருப்பது...? நேரத்தை வீணாக்க வேண்டாம்... ஒவ்வொரு விநாடியும் இப்போது நமக்கு விலைமதிக்க முடியாதது... இந்த கான்ஃபரன்சைக் கூட்டியதற்கான நோக்கத்தைச் சொல்லி விடுங்கள்...''

தலையசைத்து விட்டு நட்வர்லால் இளம் விஞ்ஞானிகளைப் பார்த்து மெல்லிய குரலில் சொன்னார்.

''இப்போதைய சிக்கலான நிலைமை உங்கள் எல்லாருக்கும் நன்றாகப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்... பிரதமரிடம் தந்த வாக்குறுதியை நிறைவேற்ற கான்க்ரீட்டான பதிலோடு முன்வருபவர்களை நான் எதிர்பார்க்கிறேன்...''

''நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள் ஸார்...?''

''எல்லோரும் கோரஸாக சொல்லும் பதில் எனக்குத் தேவையில்லை... இந்த நிலைமையை பொறுப்புடன் தோளில் சுமக்கும் விஞ்ஞானி ஒருவர் தான் இப்போது தேவை... அப்படி வருபவர் ஏதாவது ஒரு வெளிநாட்டுக்கு உடனடியாய் செல்ல வேண்டியிருக்கும்''

அவர் சொல்லி நிறுத்த விஞ்ஞானிகள் தங்களுக்குள் பரஸ்பரம் மவுனப் பார்வைகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.

''இந்தப் பிரச்னையை என்னால் தீர்க்க முடியும் என்று கான்க்ரீட்டான நம்பிக்கையோடு முன் வருபவர்கள் யாரேனும் இருக்கிறீர்களா...?''

சோப்ரா தொடர்ந்தார்.

''டைரக்டர் கேட்கிறார் என்பதற்காக எழுந்து



நிற்கக் கூடாது... நிஜமாகவே சாதிக்க முடிந்தவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்... 'இந்தியாவின் கவுரவத்தை நிமிர்ந்து நிற்கச் செய்யப் போகிறோம்' என்ற பொறுப்புணர்ச்சி மிகுந்தவர் களாக இருக்க வேண்டும்... அமெரிக்கா நமக்கு உதவ மாட்டேன் என்று கையை விரித்திருக்கிற நிலையில்... மீண்டும் ஒரு தலை குனிவுக்கு இந்தியாவை இட்டுச் செல்பவர்களாக அவர்கள் இருக்கக் கூடாது... சொன்னால் செய்து காட்டுபவர்களாக இருக்க வேண்டும்...''

சோப்ரா சொல்லி முடித்து விட்டு கூடியிருந்தவர்களைப் பார்த்தார்.

விநாடிகளைத் தின்று நிமிஷங்கள் வளர்ந்தன.

ஏறக்குறைய ஐந்து நிமிஷங்கள் நிசப்தத்தில் காலாவதி ஆயின.

ஒருவர் கூட எழுந்து நிற்கவில்லை.

## 6

**ச**ர்தார்ஜி தோற்றத்தில் இருந்த மாலினி அந்தப் புளிய மரத்தின் மறைவிலிருந்து அகன்ற போது - சந்திரா, கனகவல்லி, வேதாசலம் ஆகியோர் ஃபார்ம் ஹவுக்குள் போயிருந்தார்கள்.

டிரைவர் பீடிக் கட்டைப் பிரித்துக் கொண்டே ஃபார்ம் ஹவுஸின் பின்பக்கம் சென்று விட -

அடர்த்தியான மரங்களுக்கிடையே பதுங்கிப் பதுங்கி மண்பாதையைத் தொட்டாள் மாலினி.

அங்கே புதர்ச் செடியோரமாய் ஒரு நூறு சிசி பைக் படுக்க வைக்கப்பட்டிருந்தது.

அதை நிமிர்த்தி - இருக்கையில் ஆரோகணித்தாள்.

கிக்கரை உதைக்க என்ஜின் கதறியது.

பைக் சத்தம் கேட்டு யாராவது வெளியே வந்து பார்க்கிறார்களா என்று ஃபார்ம் ஹவுசை ஒரு முறை திரும்பிப் பார்த்தாள்.

ஃபார்ம் ஹவுஸ் ஆழமான அமைதியுடன் இருந்தது.

மாலினி குதிகாலினால் கியரை மாற்றிக் கொண்டு ஆக்ஸிலேட்டரை முறுக்கினாள்.

வேகமெடுத்தது பைக்.

பெட்ரோல் மணத்தையும், இள நீல நிறப் புகையையும் சைலன்சர் வழியே கொட்டிக் கொண்டே புழுதி எழும்ப மண் சாலையைக் கடந்தது.

சொற்ப நிமிஷத்தில் நெடுஞ்சாலையை எட்டிப் பிடித்து - ராட்சத வேகத்தில் காற்றை வெட்ட ஆரம்பித்தது.

அறுநூறு விநாடிகளுக்கு அபார வேகத்தில் பயணித்தவள் - அந்த ஹைவேஸ் ரெஸ்ட்டாரெண்ட்டின் ஓரமாய் பைக்கைக் கொண்டு போய் எஞ்சினை அணைத்தாள்.

ரெஸ்ட்டாரெண்ட்டை ஒட்டி இருந்த பெட்டிக் கடையில் புத்தகங்கள் காய்த்துத் தொங்கின.

மாலினியை சர்தார்ஜி என்றே நினைத்த பெட்டிக் கடைக்காரன் கூப்பிட்டான்.

''ஜி... ஹிந்தி கிதாபே இதர் மீல்த்தே ஹை...''

''நஹி சாஹியே...''

அவனுக்கு அலட்சியமாய்ப் பதில் அளித்து விட்டு - பெட்டிக்கடையை அடுத்து இருந்த டெலிபோன் பூத்துக்குள் நுழைந்தாள்.

எஸ்.ட்டி.டி

ஐ.எஸ்.டி

சன்பிலிமில் தங்க நிறத்தில் வெட்டப்பட்ட எழுத்துக்கள் பளபளத்தன.

பூத் இளைஞன் அவளுக்குக் கூண்டைக் காட்டினான்.

அதற்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டாள். ரிஸீவரை எடுத்துக் கொண்டு எண்களை அழுத்தினாள்.

டிஸ்ப்ளேயில் சிவப்பு நிறத்தில் எண்கள் - அவள் பொத்தானை அழுத்த அழுத்த ஒவ்வொன்றாய்ப்



பூத்தன.

மறுமுனையில் ரிங் போய் ரிசீவர் எடுக்கப்பட்டதும் தணிந்த குரலில் ஆங்கில வார்த்தைகளை உதிர்த்தாள்.

''நான் மாலினி பேசுகிறேன்...''

''காரியம் என்ன ஆயிற்று...?''

''ஆகிக் கொண்டே இருக்கிறது...''

''சந்திரா...?''

''வந்து விட்டாள்...''

''எங்கே தங்குகிறாள்...?''

''அவள் தோழியின் பண்ணை வீட்டில் தங்குகிறாள்...''

''இடத்தை நீ பார்த்தாயா...?''

''பின் தொடர்ந்து சென்று பார்த்து விட்டுத்தான் வருகிறேன்...''

''பண்ணை வீடு என்றால் அங்கே ஆட்கள் நிறைய இருப்பார்களா...?''

''இல்லை... மரங்களைப் பராமரிக்க நான்கு அல்லது ஐந்து பண்ணை ஆட்கள் மட்டுமே இருக்கிறார்கள்...''

''அவள் தோழியும் அங்கே தான் தங்குவாளா...?''

''அப்படித் தெரியவில்லை... சந்திராவை மட்டும் பண்ணை வீட்டில் தங்க வைத்து விட்டு அவள் தோழியும் கணவரும் சிட்டிக்கு சென்று விடுவார்கள் போலுள்ளது...''

''அப்படியானால் நம்முடைய காரியத்திற்கு இடைஞ்சல்கள் ஏதும் இல்லை என்று சொல்...''

''ஆமாம்...''

''சரி... டெலிபோனில் அதிக நேரம் பேச வேண்டாம்... மீண்டும் நாளை மறுநாள் உன்னிடமிருந்து டெலிபோன் காலை எதிர்பார்க்கிறேன்...''

''சரி...'' என்று சொல்லி ரிசீவரைச் சாத்தினாள் மாலினி.

## 7

நட்வர்லாலும், சோப்ராவும் எதிர் எதிர் நாற்காலிகளில் சாய்ந்திருந்தார்கள்.

நட்வர்லாலின் முகப் பரப்பில் கவலை கணிசமாய்ப் பரவிக் கிடக்க, உதட்டை அசைத்தார்.

''நம் சயன்ட்டிஸ்ட்ஸ் எல்லோருமே கையை விரித்து விட்டார்கள்...'' சோப்ரா பெருமூச்சு விட்டார்.

''இது ஏற்கெனவே எதிர்பார்த்ததுதான்...''

''தன்னம்பிக்கை உள்ளவர்கள் ஒருவர் கூடவா இல்லை...?''

''அப்படி சொல்லிவிட முடியாது... தரப்பட்ட காலம் மிகக் குறுகியது... அதற்குள் தவறுகளை சரி செய்து முடிக்க ''நோ ஹௌ'' வேண்டும் அல்லவா...? தங்களின் திறன் என்ன என்பதை சரியாகப் புரிந்து வைத்திருப்பதால்தான் அவர்கள் மவுனம் சாதித்தார்கள்...''

''சரி... அடுத்த கட்ட நடவடிக்கை என்ன...? பத்து நாள் அவகாசம் வாங்கிய பின்னரும் எதுவுமே செய்யாமல் ராக்கெட்டைச் செலுத்தி அது கடலில் சென்று விழும் நிலை ஏற்பட்டால் அது தேசத்திற்கே அவமானம்... அது ஒரு பக்கம் இருக்க - பிரதமருக்கும் விண்ணியல் துறை அமைச்சகத்துக்கும் நாம் என்ன பதில் சொல்ல முடியும்...?''

''நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன்...''

சொன்ன சோப்ராவை ஏறிட்டுப் பார்த்தார் நட்வர்லால்.

''சொல்லுங்கள்.''

''தனியார் நிறுவனங்களில் ஒப்பந்த அடிப்படையில் பலமுறை வெளிநாடு சென்று வந்து ஒவ்வொரு துறையிலும் லேட்டஸ்ட் விஷயங்களைக் கற்று வைத்திருப்பவர்கள் நிறைய பேர் இருக்கின்றனர்... அரசாங்க விஞ்ஞானிகளால் சாதிக்க முடியாததை அவர்களால் சாதிக்க முடியும்... அவர்களை நாம் பயன்படுத்திக் கொண்டால் என்ன...?''



''எப்படி அவர்களைப் பயன்படுத்துவது...? தகுதியான நபர்களை அடையாளம் காண வேண்டும்... பெரும்பாலும் அவர்கள் தனியாரிடம் காண்ட்ராக்டில் தான் இருப்பார்கள்... நமக்கு உதவும் மனம் இருந்தாலும் சட்டச் சிக்கல்கள் இடையூறு செய்யும்...''

சோப்ரா மறுத்தலாய்த் தலை அசைத்தார்.

''நான் சொன்னதை நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்...''

''சொல்ல வந்ததை விளக்கமாகச் சொல்லுங்கள் சோப்ரா...''

''அந்தத் தகுதி வாய்ந்த நபர்களை நாம் மறைமுகமாக உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்லுகிறேன்...''

''எப்படி...?''

''அவர்களை காண்ட்ராக்ட்டில் வைத்திருக்கும் கம்பெனிகளை இந்தப் பணியைச் செய்து தர அழைக்கலாம்...''

நட்வர்லால் மலர்ந்தார்.

''இது நல்ல யோசனைதான்... தகுதி வாய்ந்த நபர்களை வைத்திருக்கும் கம்பெனிகளைப் பற்றிய விபரம் தங்களிடம் உள்ளதா...?''

''சப் ஆர்டினேட்களிடம் விபரம் சேகரிக்கும் பணியை ஒப்படைத்திருக்கிறேன்... இந்நேரம் அவர்கள் பணியை முடித்து இருப்பார்கள்...''

சொல்லிக் கொண்டே ஆட்காட்டி விரலால் இண்ட்டர்காமை அழுத்தினார் சோப்ரா.

''ஹலோ... நான் சோப்ரா.''

''.....''

''விபரம் சேகரித்து விட்டீர்களா...?''

''.....''

''ப்ளீஸ் கம் டு மை ரூம் வித் த டீடெயில்ஸ்...''

இண்ட்டர்காம் தொடர்பைத் துண்டித்து விட்டு ஓரிரு நிமிஷங்கள் காத்திருக்க - கதவின் கைப்பிடி கீழிறங்கி ஒரு உயரமான நபர் உள்ளே வந்தார்.

அவர் கையில் ஃபைல் இருந்தது.

ஃபைலை நீட்டிக் கொண்டே சொன்னார்.

"நீங்கள் சொன்ன தகுதிகளோடு முன்னணியில் உள்ள கம்ப்யூட்டர் நிறுவனங்கள் இரண்டே இரண்டுதான்... அவைகளின் முகவரி... தொலைபேசி எண்... கீ பர்சன்ஸ் யார் யார்... போன்ற மற்ற விபரங்கள் இந்த ஃபைலில் விபரமாக உள்ளன."

"சரி நீங்கள் போகலாம்."

அவர் ஃபைலை பவ்யமாக மேஜை மேல் வைத்து விட்டு அறையை விட்டு வெளியேறினார்.

நட்வர்லாலும், சோப்ராவும் ஃபைல் விபரங்களை நிதானமாகப் புரட்டினார்கள்.

**EXCEL CYPHER SPACE PVT LTD.,**

**ULTRA INFO SOFTWARES.**

இரண்டு கம்பெனிகளின் விபரங்களையும் ஆழமாய் மனதில் வாங்கிய நட்வர்லால் சோப்ராவிடம் நிமிர்ந்தார்.

"இதில் உள்ள விபரங்களைப் பார்க்கிற போது தகுதி வாய்ந்த கம்பெனிகளாகவே தோன்றுகின்றன..."

"இவற்றின் கீ பர்சன்களை தொடர்பு கொண்டு பேசிப் பார்க்கலாம்."

டெலிபோன் எண்களைக் குறித்துக் கொண்டு டயல் செய்தார்கள்.

"எக்ஸஸ் சைஃபர் ஸ்பேஸ் ப்ரைவேட் லிமிட்டெட்..."

அந்தக் கம்பெனியின் முக்கிய நபரை லைனில் பெற்று விஷயத்தைச் சொன்னதும் மறுமுனையில் பதட்டம் கலந்த மவுனம் நிலவியது.

சில விநாடிகளுக்குப் பிறகு அந்த நபர் மெதுவாய் பேச ஆரம்பித்தார்.

"ஐ.எஸ்.ஆர்.ஓ. எங்களைத் தொடர்பு கொண்டு உதவி கேட்பதை எங்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய கவுரவமாகக் கருதுகிறோம்... ஆனால்..."

"ஆனால் என்ன...?"

"அந்த கம்ப்யூட்டர் சிக்கலை விடுவிக்கும் திறன் எங்களுக்கு இல்லை ஸார்... என் கருத்துப்படி எந்த



இந்தியக் கம்பெனிக்கும் அத்தகைய திறமை இருப்பதாகத் தோன்றவில்லை..."

"மும்பையைச் சேர்ந்த அல்ட்ரா இன்ஃபோ ஸாப்ட்வேர்ஸ் பற்றி என்ன நினைக்கிறீர்கள்...?"

"இந்தியாவில் எங்களின் ஒரே போட்டியாளர் அவர்கள் தான்... எங்களுக்குச் சமமான திறன் உள்ளவர்கள்... அவர்கள் போட்டியாளர் என்பதற்காகச் சொல்லவில்லை.. உண்மை நிலவரத்தைச் சொல்கிறேன்... நீங்கள் எதிர்பார்க்கும் பணியை அவர்களாலும் செய்து முடிக்க முடியாது... நீங்கள் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியைப் பெறுவதுதான் இப்போதைக்கு சாத்தியமான விஷயம்... அவர்களிடம் தான் உங்களுக்குத் தேவையான நவீன தொழில் நுட்பம் உள்ளது."

தொடர்பை துண்டித்து விட்டு நம்பிக்கையே இல்லாமல் அடுத்த நிறுவனத்தை தொடர்பு கொண்டார்கள்.

"ஸாரி... வி ஆர் வெரி ஸாரி..." என்ற பதில் கிடைத்தது.

ரிசீவரை அதனிடத்தில் எறிந்த நட்வர்லால் சோப்ராவைப் பார்த்தார்.

"நம்முடைய கடைசி நம்பிக்கையும் இற்றுப் போய் விட்டது..."

இருவரும் அடர்த்தியான கவலையோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்த போது -

ங்...

ங்...

ங்...

டெலிபோன் வீறிடத் துவங்கியது.

## 8

சந்திரா புடவை மடிப்புகளைச் சரிப்படுத்திக் கொண்டபின் டிரஸ்சிங் டேபிளை விட்டு அகன்றாள்.

சுவரில் அப்பியிருந்த க்வார்ட்ஸ் கடிகாரத்தில் பெரிய முள்ளைப் பார்வையில் வாங்கினாள்.

காலை நேரம் 9.20.

'இன்னும் கனகவல்லியைக் காணோமே...?'

யோசனையோடு ஹாலுக்கு வந்த போது டெலிபோன் மவுனத்தைத் துறந்து சப்தமிட ஆரம்பித்தது. ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தாள்.

''ஹலோ...''

மறுமுனையிலிருந்து கனகவல்லியின் குரல்.

''சந்திரா...''

''எங்கிருந்து பேசறே...?''

''வீட்டிலிருந்துதான்...''

''ஒன்பது மணிக்கெல்லாம் வர்றேன்னு சொன்னே... இன்னும் வீட்டில் உக்காந்தபடி என்ன பண்றே...?''

''தூரத்து உறவினர் ஒருத்தர் திடீர்னு வீட்டுக்கு வந்துட்டார்... அவரைக் கவனிச்சு அனுப்பினதில் லேட் ஆயிடுச்சு...''

''பரவாயில்லை... நம்ம ப்ரொக்ராமை இன்னொரு நாள் வெச்சுக்கலாமா...?''

கனகவல்லியிடமிருந்து அவசரமாய் மறுப்புக் குரல் வந்தது.

''நோ... நோ... வந்தவங்க பார்த்துப் பேசிட்டுக் கிளம்பிப் போய்ட்டாங்க...''

''அப்படின்னா இனிமே கிளம்பி நீ இங்கே வர்றியா...?''

''இல்லை...''

''பின்னே...?''

''நான் காரில் அங்கே வந்து உன்னை பிக் அப் பண்ணிட்டு திரும்பவும் சிட்டிக்கு வர்றதை விட காரை மட்டும் அனுப்பி வெக்கலாமேன்னு என் கணவர் சொன்னார்.''

''அதுவும் நல்ல யோசனைதான்... நான் தயாரா இருக்கேன்... கார் அனுப்பி வை...''

''அனுப்பி வெச்சிட்டேன்... அநேகமா இன்னும் பத்து நிமிஷத்தில் கார் ஃபார்ம் ஹவுஸுக்கு வந்துடும்...''

''அந்த தரகர் கிட்டே ஏற்கெனவே



அப்பாயின்மெண்ட் புக் பண்ணியிருக்கோமே...? கரெக்ட் டயத்துக்கு நாம போய்ச் சேர முடியுமா...?''

''பதினோரு மணிக்குத்தான் நமக்கு அப்பாயின்மென்ட் கொடுத்திருக்கார்... நமக்கு இன்னும் நிறைய நேரம் இருக்கு...''

''அப்படின்னா சரி.''

''உன் மகளோட ஹாரஸ்கோப் டீடெயில்சை மறக்காம எடுத்து வெச்சுக்க...''

''கம்ப்யூட்டர் பிரிண்ட் அவுட்ஸ் தயாராயிருக்கு.''

''சரி... மத்ததை நேர்ல பேசிக்குவோம்.''

'டொக்' என்ற உறுத்தாத சப்தத்தோடு தொடர்பு துண்டாகிப் போனது.

முன் அறைக்கு போய் சோபாவுக்கு சாய்ந்து டீபாயின் மேல் கிடந்த புத்தகங்களைப் பத்து நிமிஷங்கள் பார்வையால் மேய்ந்து கொண்டிருந்தாள் சந்திரா.

''பிங்க்க்க்....''

கார் ஹார்ன் சப்தம் கேட்க - புத்தகத்தை டீபாய்க்குத் திரும்பக் கொடுத்து விட்டு எழுந்தாள்.

பிங்க் நிற பாலிதீன் பைக்குள் போட்டு வைத்திருந்த மகளின் ஹாராஸ் கோப் காகிதங்கள், பயோடேட்டா அடங்கிய பைலை எடுத்துக் கொண்டு ஃபார்ம் ஹவுஸின் போர்டிகோவுக்கு வந்தாள்.

க்ரே நிற அம்பாஸிடரின் பின் ஸீட்டைத் திறந்து வைத்தான் டிரைவர்.

''வீட்டுக்கு உறவுக்காரங்க வந்துட்டாங்க... அம்மாவால வர முடியலை... அதனால என்னை மட்டும் அனுப்பி வெச்சாங்க.''

''தெரியும். இப்பத்தான் உன்னோட அம்மா போன்ல பேசினாங்க...'' சொல்லிக் கொண்டே பின் சீட்டில் நுழைந்தாள்.

கதவை மெல்லிய சப்தத்தோடு சாத்தி விட்டு பானட்டை சுற்றி வந்து தன் இருக்கையில் அமர்ந்து ஸ்டியரிங்கைப் பிடித்தான் டிரைவர்.

இக்னீஷியனைத் திருக - மெல்லிய கனைப்புடன் கார் கிளம்பி ஃபார்ம் ஹவுஸைக் கடந்து - இரண்டு

நிமிஷங்களுக்குப் பிறகு -

நெடுஞ்சாலையைத் தொட்டு வேகம் பிடித்தது.

நேற்று பூராவும் ஓய்வெடுத்த பின்னும் 'ஜெட் லாக்' இன்னமும் உடம்பில் தீராமல் இருக்க - சீட்டில் பின்னுக்கு சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள் சந்திரா.

எத்தனை நிமிஷங்கள்...! தெரியவில்லை...!

பிரேக் அடித்து கார் நின்றதை உணர்ந்தவளாய் கண்களை மலர்த்தினாள்.

பெரிய பங்களா கண்ணில் விரிந்தது.

டிரைவர் இறங்கி வந்து கதவைத் திறந்து விட்டான்.

''பங்களா வந்தாச்சும்மா...''

தரையில் கால் பதித்தவள் போர்டிகோ படிகளில் உயர்ந்தாள்.

வரந்தாவைக் கடந்து விஸ்தாரமான ஹாலை அடைகிற போதே லேசாகத் துணுக்குற்றாள்.

வராந்தா, ஹால் எல்லாமே யாரும் உபயோகிக்காத இடம் போல மெல்லிய தூசிப்படலம் படர்ந்து கிடந்தன.

மேற்கூரைகளில் சிலந்தி வலை.

சுற்றும் முற்றும் பார்த்தபடி யோசித்தாள்.

'இது கனகவல்லியின் பங்களாதானா...?' யோசித்துக் கொண்டிருக்கும் போதே கதவு சாத்தப்படும் சத்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தவள் திடுக்கிட்டாள்.

சர்தார்ஜி உடையில் ஒருவன் கைகளை மார்புக்குக் குறுக்கு வெட்டாய் கட்டிக் கொண்டு நின்றிருந்தான்.

சிரித்தான்.

''ஸாரி... மிஸஸ் சந்திரா... இங்கே உங்க தோழி கனகவல்லியும் வர மாட்டாள்... உங்க தோழியோட வீட்டுக்காரர் வேதாசலமும் வர மாட்டார்... கனகவல்லி அனுப்பின கார் டிரைவர் இந்நேரம் ஃபார்ம் ஹவுஸில் உங்களைக் காணாமே தேடிட்டு இருப்பான்...''



சந்திரா அதிர்ச்சியோடு அவனைப் பார்த்தாள்.

''ஏ... என்னை எதுக்காக...'' பேச முயன்றவளை சர்தார்ஜி கையமர்த்தினான்.

''பயப்படாதீங்க... நீங்க நாற்பத்தஞ்சு வயசு அரைக் கிழவி... நிச்சயமா உங்க கற்புக்கு எந்த ஆபத்தும் கிடையாது... ஆனா உங்க உயிருக்கு இங்கே ஆபத்து இல்லைன்னு என்னால உத்திரவாதம் எதுவும் தர முடியாது...''

சந்திராவின் விழிகளில் பயம் மெல்லிய படலமாய்ப் படிந்தது.

## 9

வீறிடத் துவங்கிய டெலிபோனின் ரிசீவரை நட்வர்லால் எடுக்க - அது சாந்தமானது.

''ஹலோ...''

''ஐ.எஸ்.ஆர்.ஓ. டைரக்டருடன் பேச வேண்டும்...''

''ஹோல்டிங்... நீங்கள் யார் பேசுவது...?''

''என் பெயர் தினேஷ்...''

''சொல்லுங்கள்...''

''அவசரமாய் உங்களுடன் பேச விரும்புகிறேன்... நேரம் ஒதுக்க முடியுமா...?''

''என்ன விஷயமாய்...?''

''நீங்கள் இப்போது எந்தப் பிரச்னைக்காகத் திணறிக் கொண்டிருக்கிறீர்களோ... அதே பிரச்னை சம்பந்தமாகப் பேசத்தான் உங்களைச் சந்திக்க விரும்புகிறேன்...''

''வாட் டூ யு மீன்...?''

''ராக்கெட்டைச் செலுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியும்... அந்த சிக்கலைக் களையும் வழி முறையும் எனக்குத் தெரியும்.''

''நீங்கள் எங்கிருந்து பேசுகிறீர்கள்.?''

''நான் ஒரு கம்ப்யூட்டர் ஸ்காலர்... நீங்கள் விருப்பப்பட்டால் நேரில் வந்து மற்ற விபரங்களைச்

சொல்லுகிறேன்."

"ஜஸ்ட் ஹோல்டு ஆன் த லைன் ப்ளீஸ்."

சொல்லி விட்டு ரிசீவரின் வாயைப் பொத்தியபடி சோப்ராவிடம் நிமிர்ந்தார்.

"சோப்ரா..."

"போனில் யார்...?"

"சிக்கலைத் தீர்க்க நாம் தகுந்த நபர்களைத் தேடிக் கொண்டிருந்தோம்... ஆனால் கம்ப்யூட்டர் ஸ்காலர் ஒருவன் அவனாகவே நம்மைத் தொடர்பு கொண்டுள்ளான்."

"யார் அது.?"

"பெயர் தினேஷ்" என்று துவங்கி சுருக்கமாக விபரங்களை அவரிடம் சொன்னார்.

சோப்ரா புருவங்களை சுருக்கினார்.

"இது யோசிக்க வேண்டிய விஷயம்..."

சொன்ன சோப்ராவை வியப்பான பார்வை பார்த்தார் நட்வர்லால்.

"யோசிப்பதற்கு இதில் என்ன இருக்கிறது. அந்த ஆளைக் கூப்பிட்டுப் பேசலாமா வேண்டாமா என்பதுதான் கேள்வி."

"பேசலாம். ஆனால்."

"ஆனால் என்ன...?"

"இந்த விஷயத்தை பிரதமர் அலுவலகத்துக்கு கூட எட்ட விடாமல் நாம் ரகசியமாக அல்லவா வைத்திருக்கிறோம்... இந்த தினேஷுக்கு எப்படி விஷயம் தெரிந்தது...?"

மெலிதாய்ப் புன்னகைத்தார் நட்வர்லால்.

"இந்த சிக்கலை முடிவுக்குக் கொண்டுவர தனியார் கம்பெனியை நாடுவது என்று முடிவெடுத்தோம்... தகுதி வாய்ந்த தனியார் நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பையும் உங்களிடம் தந்தேன்... நீங்கள் அசைன்மென்ட்டை உங்கள் சபார்டினேட்களிடம் ஒப்படைத்தீர்கள்... அந்த நிமிஷமே விஷயம் ஐ.எஸ்.ஆர்.ஓ.வை விட்டு வெளியே செல்வதற்கான முகாந்திரங்கள் ஆரம்பமாகி விட்டன..."



"இருந்தாலும்..."

சோப்ராவின் வார்த்தையைபாதியில் கத்தரித்தார் நட்வர்லால்.

"உங்கள் சந்தேகங்களை எல்லாம் அந்த தினேஷிடம் நேரில் விசாரித்துக் கொள்ளலாம்... எல்லாக் கதவுகளும் அடைத்துக் கொண்ட நிலையில் நம்பிக்கை அளிக்கும் விதத்தில் பேசிய அவனைக் கூப்பிட்டுப் பேசலாம் என்றுதான் தோன்றுகிறது..."

சோப்ரா அரை மனதோடு தலையாட்டினார்.

"உங்களுக்கு சரி என்றால் எனக்கும் சரிதான்."

ரிசீவரைப் பொத்தியிருந்த விரல்களை விலக்கின நட்வர்லால் மவுத்பீஸில் குரலைத் தொடர்ந்தார்.

"மிஸ்டர் தினேஷ்... உங்களைப் பற்றிய முழு விபரங்களையும் இது சம்பந்தமான மற்ற தகுதிகளையும் எடுத்துக் கொண்டு நீங்கள் என்னைச் சந்தித்துப் பேசலாம்..."

"தாங்க்யூ ஸார்... நான் எப்போது வந்து உங்களைச் சந்திப்பது...?"

"இந்த நிமிஷத்திலிருந்து நான் உங்கள் வரவை எதிர்பார்க்கிறேன்..."

"அப்படியானால் அரை மணி நேரத்தில் நான் அங்கே இருப்பேன். நேரில் நாம் விரிவாகப் பேசிக் கொள்ளலாம்..."

தினேஷ் தொடர்பைத் துண்டிக்க - நட்வர்லாலும் தன் கையிலிருந்த ரிசீவரை அதனிடத்தில் வைத்தார்.

"அரை மணி நேரத்தில் தினேஷ் இங்கே வருகிறான்..."

"எனக்கென்னவோ அவன் மேல் நம்பிக்கை பிறக்கவில்லை..."

"முயற்சி செய்து பார்க்கலாம்."

வால் கிளாக்கில் நிமிஷங்கள் டிக் டிக் என்று நொண்டிக் கொண்டிருக்க,

இருவரும் வரப் போகிற தினேஷுக்காக மவுனத்தைச் . சுமந்து கொண்டு காத்திருக்க ஆரம்பித்தார்கள்.

## 10

கனகவல்லியும், வேதாசலமும் அந்தக் கார் டிரைவரை அதிர்ச்சி அப்பிய விழிகளால் பார்த்தார்கள்.

"என்ன சொல்றே... ஃபார்ம் ஹவுஸில் சந்திரா இல்லையா...?"

"அங்கே யாரும் இல்லைங்கய்யா..."

"புறப்பட்டு ரெடியா இருக்கேன்னு என் கிட்டே போன்ல சொன்னாளே..." கனகவல்லி கலக்கமாய் கேட்டாள்.

"நான் போனப்பவே அவங்க இல்லைம்மா..."

"பண்ணையில் வேலை செய்யறவங்களைக் கேட்டியா...?"

"பண்ணை ஆட்கள் எல்லாம் தோப்புக்குள்ளே இருந்தாங்க... ஃபார்ம் ஹவுஸில் யாரும் இல்லைன்னு தெரிஞ்சதும் நான் திரும்பி வந்துட்டேன்..."

வேதாசலம் திட்டினார்.

"முட்டாள்! கடன் வேலை செய்யறதுக்காகவா உன்னை அனுப்பினேன்...? ஆள் இல்லைன்னா அங்கே உள்ளவங்ககிட்டே விபரமா விசாரிச்சிட்டு வர வேண்டாமா...?"

தலையைச் சொறிந்தான் அந்த டிரைவர்.

"சரி. சரி... தேமேன்னு நிக்காம காரை எடு! ரெண்டு வேலை செய்யணும்னு இருக்கு... கனகவல்லி... வா போகலாம்..."

போர்டிகோவில் நின்றிருந்த காரின் பின் இருக்கைக்குத் தங்களைக் கொடுத்தார்கள் கனகவல்லியும், வேதாசலமும்.

கார் பங்களாவை விட்டு அகன்று தார் சாலையை விழுங்க ஆரம்பித்தது.

போக்குவரத்தில் திணறி இருபது நிமிஷங்களை பயணத்தில் தின்று தீர்த்தது.

ஃபார்ம் ஹவுஸ் வாசலில் காரை நிறுத்தினான் டிரைவர்.



இருவரும் கீழே இறங்கினார்கள்.

கனகவல்லி வாசல் கதவை நோக்கி வேகவேகமாய் போனாள்.

கதவு வெறுமனே சாத்தியிருக்க - அதை விலக்கிக் கொண்டு உள்ளே சென்றாள்.

"சந்திரா..."

கூப்பிட்டுப் பார்த்தாள்.

எந்த பதிலும் வராமல் போகவே - வேதாசலம் சொன்னார்.

"பண்ணை ஆட்களைக் கூப்பிட்டுக் கேளு."

தலையசைத்த கனகவல்லி அவரோடு ஃபார்ம் ஹவுஸின் பின் பக்கம் இருந்த தோப்புக்குள் வேகமாய் போனாள்.

தோப்பின் அடர்த்தியான மாமரங்கள் நெருக்கமான கிளைகளால் சூரிய வெப்பத்திற்கு 'நோ என்ட்ரி' சொல்லியபடி குடை பிடித்துக் கொண்டிருந்தன.

தோப்பின் மையத்திற்குச் சென்றபோது, அங்கே இரண்டொரு வேலை ஆட்களைப் பார்க்க முடிந்தது.

சருகுகளை ஒன்று சேர்த்துத் தரையை சுத்தம் செய்து கொண்டிருந்தார்கள்.

இருவரையும் பார்த்ததும் அவசரமாய்த் தோள் துண்டை இடுப்பில் சுற்றிக் கொண்டு பவ்யமாய் ஓடி வந்தார்கள்.

கனகவல்லி கேட்டாள்.

"பண்ணை வீட்டில் தங்கியிருந்த அம்மா எங்கே போனாங்கன்னு தெரியுமா...?"

"வீட்லதானே இருந்தாங்க...?"

"இப்ப இல்லையே...?"

"நாங்க தோப்புக்குள்ளே வந்து ஒரு மணி நேரம் ஆகுதும்மா... நாங்க வர்றப்போ அந்தம்மா அங்கேதான் இருந்தாங்க..."

இன்னொரு ஆள் குறுக்கிட்டு சொன்னான்.

"காவல்கார ராமசாமி முன்னாலதான் இருந்தான்... அவனைக் கேட்டிங்கன்னா தெரியும்ங்கய்யா..."

"ராமசாமியையும் அங்கே காணோமே...?"

கனகவல்லி வேலையாட்களிடம் சொன்னாள்.

"மொதல்ல அவன் எங்கேன்னு பாருங்க..."

"சரிங்கம்மா..."

தலையாட்டி விட்டு அவர்கள் தோப்புக்குள் ஆளுக்கொரு பக்கமாய் போனார்கள்.

கனகவல்லியும், வேதாசலமும் கவலையான முகங்களோடு தோப்பின் முன் பகுதியை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

ஃபார்ம் ஹவுஸை நெருங்கிய போது - வேலை ஆட்களில் ஒருவன் ஓடி வந்தான்.

"அய்யா..."

மூச்சிறைக்க வந்து நின்றவனின் முகப்பரப்பில் உச்சபட்ச பதட்டம்.

"என்னாச்சு? ஏண்டா இப்படி தலை தெறிக்க வந்து நிக்கறே...?"

"அய்யா! அங்கே... அங்கே..."

வாய் குழறி எதிர்த் திசையில் கையைக் காட்டினான்.

"என்னடா...?"

"ரா... ராமசாமி அங்கே விழுந்து கிடக்கறான்..."

அதிர்ச்சியுடன் இரண்டு பேரும் ஓடினார்கள்.

சிறிது தூரத்தில் மண் சரிவின் கீழே ஒரு அடைப்புக் குறியாய் விழுந்து கிடந்தான் அந்த ராமசாமி.

வாயில் துணிப்பந்து அடைக்கப்பட்டதால் ஈனஸ்வரத்தில் முனகல் சப்தம் வெளியாகிக் கொண்டிருக்க -

கை கால்கள் நைலான் கயிறால் பிணைக்கப்பட்டு தெரிந்தன.

வேதாசலம் பண்ணை ஆளிடம் சத்தம் போட்டார்.

"என்னடா வேடிக்கை பார்த்துட்டிருக்கே...? மொதல்ல அவன் கயித்தை அவிழ்த்து விடு..."

அவிழ்த்து விட்டான் அவன்.

ராமசாமி பயம் ஊறிக் கொண்ட கண்களோடு எழுந்து உட்கார்ந்தான்...

வேதாசலம் அவன்கிட்டே போய் விசாரித்தார்.



"யார்ரா உன்னைக் கட்டிப் போட்டது...?"

"அய்யா! ராத்திரியெல்லாம் தோப்புக்குள்ளே காவலுக்கு இருந்துட்டு காலைலதான் இந்தப்பக்கம் வந்தேன்... அப்போ இந்த மரத்துக்குப் பின்னால தாடி வெச்ச ஒரு ஆள் நின்னுட்டு பண்ணை வீட்டையே பார்த்துட்டிருந்தான்... நான் அவனை அதட்டி யார்ன்னு கேட்டப்ப என்னை அடிச்சு கட்டிப் போட்டுட்டுப் போய்ட்டான்ங்கய்யா... ராத்திரி பூரா கண் விழிச்ச அசதியில் என்னால அவனோட சண்டை போட முடியலை... அதுக்கப்புறம் ஒரு கார் வந்து அந்தம்மாவைக் கூட்டிட்டுப் போச்சு..."

கனகவல்லி பதறினாள்.

"எனக்கென்னவோ... சந்திராவை யாரோ வலுக்கட்டாயமா கூட்டிட்டுப் போயிருக்காங்கன்னு தோணுது... நாம பேசி நேரத்தை வீணாக்க வேண்டாம்...போலீஸைக் கூப்பிடறது தான் நல்லது..."

போலீஸுக்குத் தகவல் தெரிவிப்பதற்காக வேக நடையோடு - வியர்த்த நெற்றியோடு ஃபார்ம் ஹவுஸை நோக்கிச் சென்றார், வேதாசலம்.

## 11

நாற்பத்தைந்து நிமிஷக் கழிதலுக்குப் பின் இன்டர்காம் கூப்பிட்டது. ரிஸீவரை எடுத்தார் நட்வர்லால்.

டெலிபோன் ஆபரேட்டரின் குரல் கேட்டது.

"ஸார்... தினேஷ் என்பவர் உங்களைச் சந்திக்க வந்திருக்கிறார்... டெலிபோனில் நீங்கள் அப்பாயின்மென்ட் தந்திருப்பதாகச் சொன்னார்..."

"அவரை என்னுடைய அறைக்கு அனுப்பிவையுங்கள்..."

"எஸ்... ஸார்" இன்டர்காமைச் சாத்திய சில நிமிஷங்களில் அந்த இளைஞன் அறைக்குள் உற்பத்தியானான்.

"ஐ'யாம் தினேஷ்..."

விசிட்டிங் கார்டை நீட்டினான்.

நட்வர்லால் கையைக் குலுக்கி விட்டு சோப்ராவை அறிமுகப்படுத்தி வைத்தார்.

"இவர் கம்ப்யூட்டர் டிபார்ட்மெண்ட்டின் தலைமை விஞ்ஞானி..."

சோப்ரா சம்பிரதாயமாய் அவனிடம் கையைக் குலுக்கி விட்டு அவன் கொடுத்த விசிட்டிங் கார்டை வாங்கிப் பார்த்தார்.

**தினேஷ்**

**ரமேஷ்**

**சோமேஷ்**

**ப்யாரேஷ்**

நான்கு பேரின் பெயர்களும் எம்.டெக். கம்ப்யூட்டர் சயன்ஸ் என்ற டிகிரியோடு சின்ன எழுத்துக்களில் அச்சாகியிருந்தன.

**FUTURE TREND SETTERS** என்ற நிறுவனத்தின் பெயர் விசிட்டிங் கார்டின் நடுவே சற்று தடிமனாய் தெரிந்தது.

"நீங்கள் தினேஷ்... மற்ற மூன்று பேரும்...?"

"அவர்கள் கம்பெனியின் இதர டைரக்டர்கள்...!"

"எத்தனை வருடங்களாய் இந்த கம்ப்யூட்டர் நிறுவனத்தை நடத்தி வருகிறீர்கள்...?"

"நாங்கள் நான்கு பேரும் வகுப்புத் தோழர்கள்... நண்பர்கள்... படிப்பை முடித்தபோது ஏராளமாய் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் எங்களைத் தேடி வந்தன... ஆனால் இந்திய அரசாங்கத்திற்காக பணி புரியும் வாய்ப்பு கிடைக்காதா என்று நாங்கள் ஏங்கினோம்... அதற்கான வாய்ப்பு பிரகாசமாக இல்லை... 'அரசாங்கத்தையே ஏன் நம்பி இருக்க வேண்டும்...? நால்வருமாய் சேர்ந்து ஒரு சாஃப்ட்வேர் கம்பெனி ஆரம்பிக்கலாம்... அதுவே அரசாங்கத்திற்கு நாம் மறைமுகமாக சேவை செய்வது போல' என்று அப்போது நான்தான் யோசனை சொன்னேன்... என் யோசனைக்கு நண்பர்கள் செவி சாய்த்தார்கள்... கம்பெனியை ஆரம்பித்து ஆறு வருடங்கள் ஆகிவிட்டன... எங்கள் அயராத உழைப்பினால் இப்போது வெளிநாட்டுக் கம்பெனிகளுடன் போட்டி போடும் தரத்திற்கு



நாங்கள் உயர்ந்து உள்ளோம்..."

"ஸர்வே எடுக்க அனுப்பிய ஆட்கள் உங்கள் நிறுவனத்தைப் பற்றி ரிப்போர்ட் செய்யவில்லையே...?"

"எங்கள் மார்க்கெட் வெளிநாட்டை மையமாகக் கொண்டது... அந்நியச் செலாவணியை இந்தியாவுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற பெரிய லட்சியத்தோடு செயலாற்றி வருகிறோம்... ஆகவே நம் நாட்டுக்குள் எங்களைப் பற்றிய விளம்பரங்கள் அதிகம் இருக்காது... ஆகவே உங்கள் ஆட்கள் எங்களைப் பற்றி ரிப்போர்ட் செய்யாததில் ஆச்சரியம் எதுவும் இல்லை..."

சோப்ரா அவனை நேருக்கு நேராய்ப் பார்த்தார்.

"பிரதமர் அலுவலகத்திற்குக் கூடத் தெரியாமல் நாங்கள் ரகசியமாய் வைத்திருந்த இந்த விஷயம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது...?"

தினேஷ் சிரித்தான்.

"மிகப் பெரிய கம்பெனிகள் என்று நினைத்து நீங்கள் அணுகிய நிறுவனங்களின் லட்சணம் அது..."

"என்ன சொல்கிறீர்கள்...? நான் கேட்ட கேள்வி வேறு... நீங்கள் சொல்லும் பதில் வேறு..."

"உங்கள் கேள்விக்கும் என் பதிலுக்கும் சம்பந்தம் உள்ளது..."

"விளக்கமாகச் சொல்லுங்கள்..."

"நீங்கள் அணுகின இரண்டு கம்பெனிகளும் எங்களைக் கூப்பிட்டு விபரம் சொன்னார்கள்..."

"உங்களிடம் எதற்காக அவர்கள் இந்த விஷயத்தைக் கொண்டு வந்தாகள்...?"

"நீங்கள் தருவதாக ஒப்புக் கொண்ட அதிக பட்ச பணம் அவர்களின் ஆசையைத் தூண்டி விட்டிருக்கிறது... தங்களால் முடியாது என்பது தெரிந்ததும் அந்தக் காரியத்தை முடித்துத் தர முடியுமா என்று எங்களைக் கூப்பிட்டுக் கேட்டார்கள்..."

"நீங்கள் என்ன சொன்னீர்கள்...?"

" 'ஸாரி! நாங்கள் இப்போது பிஸியாய் இருக்கிறோம். ஒப்புக் கொண்ட வேலைகளை

முடிக்கவே எங்களுக்கு நேரம் போதவில்லை' என்று சொல்லி விட்டு பின் உங்களைத் தொடர்பு கொண்டோம்..."

"மிஸ்டர் தினேஷ்... பணத்திற்கு ஆசைப்பட்டு வேலையை ஒப்புக் கொண்டு விட்டு பிறகு நீங்களும் தத்தளித்து எங்களையும் உச்சபட்ச சிக்கலில் ஆழ்த்தி விடக் கூடாது... திட்டமிட்ட நேரத்தில் உங்களால் காரியத்தை முடிக்க முடியுமா என்று முதலில் தீர யோசியுங்கள்..."

தினேஷ் மெலிதாய்ச் சிரித்தான்.

"நீங்கள் யாரை நம்பினீர்களோ அவர்களே எங்களை நம்பி இருந்தார்கள் என்பதை யோசித்துப் பாருங்கள்... அடுத்தது, உங்கள் கம்ப்யூட்டர் வல்லுநர்களை எங்கள் நிறுவனத்திற்கு வந்து பார்வை இடச் சொல்லுங்கள்... எங்கள் ப்ராஜெக்ட்டுகளை அலசிப் பார்த்துவிட்டு பிறகு முடிவு செய்யட்டும்..."

"இங்கே மிகச் சிறந்த கம்ப்யூட்டர் வல்லுநர்கள் நூற்றுக்கும் மேல் பணியாற்றுகிறார்கள்... அவர்களால் முடியவில்லை எனில் அதற்குக் காரணம் இந்த விஷயத்தைச் சாதிக்க மிக நவீன உத்திகள் தேவை என்பதுதான்... அந்த உத்திகளை எமக்கு அளிக்க மேலை நாடுகள் மறுத்துவிட்டன..."

"மேலை நாட்டுக்காரர்களுக்கு இருப்பதும் நம்முடைய சைஸ் மூளை தான் ஸார்... பயன்படுத்தும் விதத்தில்தான் ஆளுக்கு ஆள் மாறுபடுகிறோம்... மேலை நாட்டுக்காரர்களை விட ஒருபடி அதிகமாய் மூளையை உபயோகிக்க எங்களால் முடியும்..."

சொல்லி நிறுத்திய தினேஷ் ஆசுவாச மூச்சுக்குப் பிறகு மேலும் தொடர்ந்தான்.

"அது மட்டுமல்ல... இன்னொரு முக்கியமான விஷயத்தையும் சொல்லிவிடுகிறேன்... நீங்கள் நினைப்பது போல பணத்துக்கு ஆசைப்பட்டு உங்களை வந்து சந்திக்கவில்லை... நாங்கள் நால்வருமே இந்திய அரசாங்கத்துச் செய்யும் சேவையாகவே இதைக் கருதுகிறோம்..."

"வாட் டு யூ மீன்...?"



"உங்களிடமிருந்து பத்து பைசா கூட எங்களுக்குத் தேவை இல்லை... உலக அரங்கில் இந்தியாவின் கௌரவத்தைக் காப்பாற்றும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்திருக்கிறது என்ற பெருமையே போதும்..."

உறுதியோடு சொன்ன தினேஷை நட்வர்லாலும், சோப்ராவும் வியப்போடு பார்த்தார்கள்.

## 12

இன்ஸ்பெக்டர் கௌரிசங்கர் விறைப்பான காக்கி யூனிஃபார்மோடு ஃபார்ம் ஹவுசுக்கு வந்து சேர்ந்தார். சுற்றிலும் பண்ணையாட்கள்.

பண்ணை ஆள் ராமசாமி கைகள் இரண்டையும் கட்டிக் கொண்டு அவர் முன்னால் பவ்யமாய் நின்றான்.

அவர் அவனை உத்தியோகப் பார்வையில் ஊடுருவிக் கொண்டே கேட்டார்.

"உன்னை அடிச்சு கட்டிப் போட்டுட்டு அந்தம்மாவைக் கடத்திட்டுப் போயிட்டாங்களா...?"

"ஆமாங்க..."

"உன் பேர் என்ன...?"

"ராமசாமிங்க..."

"எத்தனை வருஷமா இங்கே வேலை பார்க்கறே...?"

"பத்து வருஷத்துக்கும் மேலா"

"சம்பவம் நடந்தப்ப எத்தனை மணி இருக்கும்...?"

"காலைல எட்டரை மணி அல்லது ஒம்பது மணி இருக்கும்ங்க..."

"எத்தனை பேர் வந்தாங்க...?"

"ஒரே ஒருத்தன் தான்ங்க... ஆனா கார்ல அந்தம்மாவைக் கூட்டிட்டுப் போறப்ப எத்தனை பேர் இருந்தாங்கன்னு எனக்குத் தெரியாது... அப்போ நான் பள்ளத்துக்குள்ளே கிடந்தேன்..."

"அந்தம்மா சத்தம் போட்டாங்களா...?"

"இல்லைங்க... சத்தம் எதுவும் கேக்கலை..."

"வந்தவன் எப்படி இருந்தான்...?"

"வடக்கத்தி சிங் மாதிரி இருந்தான்..."

"ஏதாவது பேசினானா...?"

" 'நான் போற வரைக்கும் சத்தம் போடாம இருக்கணும்... சத்தம் போட்டின்னா கொன்னுருவேன்'னு என்னை மிரட்டினான்..."

"என்ன பாஷைல பேசினான்...?"

"தமிழ்ல தாங்க..."

"அப்படின்னா வந்தவன் தன்னோட அடையாளத்தை மறைச்சிக்கறதுக்காக சிங் வேஷத்தில் வந்திருக்கான்னு நினைக்கிறேன்..."

வேதாசலம் குறுக்கிட்டு சொன்னார்.

"இங்கேயே செட்டில் ஆகி தமிழ் பேசற சர்தார்ஜிகள் நிறையப் பேர் இருக்காங்க இன்ஸ்பெக்டர்..."

"இருக்கலாம்... ஆனா குற்றவாளிகள் பலர் சர்தார்ஜி வேஷத்தை தங்கள் அடையாளத்தை மறைச்சிக்கறதுக்காக சௌகரியமா பயன்படுத்திக்கறாங்க..."

சொன்ன கௌரிசங்கர் அந்த ராமசாமியிடம் விசாரணையைத் தொடர்ந்தார்.

"அவனோட குரல் உனக்குப் பரிச்சயமானதா இருந்ததா...?"

"இல்லைங்கய்யா... அந்தக் குரலை இதுக்கு முன்னால நான் கேட்டதில்லே... ஆனா..." என்று நிறுத்தினான் அவன்.

"ஆனா என்ன...?"

"ஆவேசமா அவன் என்னை மிரட்டறப்போ லேசா குரல் உடைஞ்ச மாதிரி இருந்தது..."

"புரியற மாதிரி சொல்லு..."

"எப்படி சொல்லறதுன்னுதான் யோசிக்கறேங்கய்யா..." என்று தடுமாறியவன் பிறகு சட்டென்று சொன்னான்.

"லேசா பொம்பளைக் குரல் மாதிரித் தோணிச்சுங்கய்யா..."

"பொம்பளைக் குரல் மாதிரி தோணிச்சா...?" ஆச்சரியத்தோடு கேட்ட கௌரிசங்கர் வேதாசலத்திடம் திரும்பிக் கேட்டார்.

"சில ஆண்களுக்கு பெண்மை கலந்த குரல்



இருக்கும். அந்த மாதிரி உங்களுக்குத் தெரிஞ்சவங்க யாராவது இருக்காங்களா மிஸ்டர் வேதாசலம்...?"

"நோ இன்ஸ்பெக்டர்... எனக்குத் தெரிஞ்சவங்க அப்படி யாரும் கிடையாது..."

அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே - ஃபார்ம் ஹவுஸின் ஹாலில் இருந்த டெலிபோன் வீறிடத் துவங்கியது.

போனுக்கு அருகில் சென்று ரிசீவரை எடுத்த வேதார்சலம் கௌரிசங்கரிடம் திரும்பினார்.

"ஸார்... போன் உங்களுக்குத்தான்..."

"ஸ்டேஷனிலிருந்தா...?"

"தெரியலை..."

வேதாசலம் நீட்டிய ரிசீவரைக் காதோரம் கொண்டு சென்றார் கௌரிசங்கர்.

"ஹலோ..."

"இன்ஸ்பெக்டரா...?"

மறுமுனையில் கரகரத்த குரலுக்காக லேசாக எரிச்சலடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் கேட்டார்.

"ஆமா...! யார் நீங்க...?"

"சந்திராம்மாவைக் கடத்திட்டுப் போன தன்வீர்சிங் பேசறேன்..."

கௌரிசங்கர் பதட்டமானார் "எதுக்காக அந்தம்மாவைக் கடத்தினே...?"

"அஞ்சு கிலோ தங்கத்துக்காக..." குரல் சிரித்தது.

"வாட் டூ யூ மீன்...?"

"சொல்றேன்..." என்று அவன் ஆரம்பித்தபோது - டெலிபோன் தொடர்பு சட்டென்று அறுந்தது.

## 13

ஏர்கண்டிஷன் 'ஹம்ம்'மென்று உறுமிக் கொண்டிருக்க - இறுக்கமான சம்பிரதாய சூட் அணிந்து பிரதமர் உட்கார்த்திருந்தார்.

ஐ.எஸ்.ஆர்.ஓ. டைரக்டர் நாட்வர்லால் எதிர் இருக்கையில் பவ்யமாய் உட்கார்ந்திருந்தார்.

பிரதமர் கேட்டார்.

"என்ன நடக்கிறது...? ப்ராக்ரஸ் திருப்திகரமாய்

உள்ளதா...? சொன்ன தேதியில் ராக்கெட் செலுத்தப்படுமா...?''

''நிச்சயமா ஸார்...''

''கடைசி நிமிஷக் குளறுபடிகள் எதுவும் இருக்காதே...?''

''இந்த முறை இருக்காது ஸார்...''

''ஒவ்வொரு பத்திரிகையாளர் சந்திப்பிலும் இது முக்கியத்துவம் வாய்ந்த கேள்வியாக இருக்கிறது... டெக்னிக்கல் எரர் சில சமயங்களில் தவிர்க்க முடியாதது... நம்மிடம் திறமையான விஞ்ஞானிகள் இருக்கிறார்கள்... பத்து நாட்கள் அவகாசத்தில் தவறுகளை சரிசெய்து விடுவார்கள் என்று நான் பதில் சொல்லி வருகிறேன்... உள்ளூர் பத்திரிகைகளிடம் மட்டுமல்ல... வெளிநாட்டுப் பத்திரிகைகளிடமும் இதே பதிலைத்தான் சொல்லி வருகிறேன்... ஆகவே மறுபடி ஒரு முறை குளறுபடி ஏற்பட்டால் இந்தியாவைக் கையாலாகாத நாடு என்று உலகம் விமர்சிக்கும்...''

''அப்படி ஒரு நிலை ஏற்படாது ஸார்...''

''நான் ஏன் இதைத் திருப்பி திருப்பிக் கேட்கிறேன் என்று தெரியுமா...?''

''தெரியும் ஸார்... இந்தியாவின் கவுரவம் இதில் அடங்கி உள்ளது...''

''அது ஒரு காரணம் என்றால், உளவுத் துறை ரிப்போர்ட் இன்னொரு காரணம்...''

நட்வர்லால் குழப்பமாய் நிமிர்ந்து அவரைப் பார்த்தார்.

''உ... உ... உளவுத்துறை ரிப்போர்ட்டா...?''

''ஆமாம்... ஐஎஸ்ஆர்ஓ கம்ப்யூட்டர் வல்லுநர்கள் அத்தனை பேரையும் கூட்டி நீங்கள் நடத்திய அவசர மீட்டிங் பற்றி உளவுத் துறை ரிப்போர்ட் அனுப்பி இருக்கிறது...''

அதிர்ச்சியோடு பிரதமரை ஏறிட்டார் நட்வர்லால்.

''எ... என்னவென்று...?''

''சிக்கலைத் தீர்த்து வைக்கிற திறமை தங்களில் எவருக்கும் இல்லையென்று ஐஎஸ்ஆர்ஓ கம்ப்யூட்டர் வல்லுநர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்...



ஐஎஸ்ஆர்ஓ இப்போது கையைப் பிசைந்து கொண்டிருக்கிறது என்பதுதான் ரிப்போர்ட்டின் சாராம்சம்... இதுதானே உண்மை நிலை...?''

''ரிப்போர்ட்டில் பாதி உண்மை இருக்கிறது ஸார்...''

''என்ன சொல்கிறீர்கள்...?''

''ஐஎஸ்ஆர்ஓ கம்ப்யூட்டர் வல்லுநர்கள் கையை விரித்து விட்டது உண்மைதான்... ஆனால் நாங்கள் இப்போது கையைப் பிசைந்து கொண்டிருக்கவில்லை... மாற்று ஏற்பாடு செய்திருக்கிறோம்...''

''என்ன செய்து இருக்கிறீர்கள்...?''

''திறமையான தனியார் நிறுவனம் ஒன்றிடம் அந்த வேலையை ஒப்படைத்திருக்கிறோம்...''

''எந்த நிறுவனம்...?''

''ஃப்யூச்சர் ட்ரெண்ட் செட்டர்ஸ் என்ற நிறுவனம்... நான்கு துடிப்பான இளைஞர்கள் நிறுவனத்தை நடத்துகிறார்கள்... தேசப்பற்று மிகுந்த இளைஞர்கள்... ஒரு பைசா வாங்கிக் கொள்ளாமல் இந்த வேலையை செய்து முடிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்...''

''ஐஎஸ்ஆர்ஓ விஞ்ஞானிகளால் முடியாததை அந்த இளைஞர்கள் சாதிப்பார்களா...?''

''நிச்சயமாக சாதிப்பார்கள் ஸார்... சோப்ரா தலைமையில் ஒரு குழு அவர்களின் பணியை மேற்பார்வை இட அவர்களுடைய அலுவலகத்திற்கே சென்றுள்ளது...''

''நீங்கள் என்னவோ செய்து கொள்ளுங்கள்... எனக்குத் தேவையானதெல்லாம் சொன்ன தேதியில் ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட வேண்டும்... அவ்வளவுதான்...''

''அதற்கு நான் முழுப் பொறுப்பு ஏற்கிறேன் ஸார்...''

''ஒக்கே... நீங்கள் போகலாம்...''

பிரதமருக்கு மறுபடியும் வணக்கம் செலுத்திவிட்டு அந்த ஏசி அறையை விட்டு வெளியே வந்தார் நட்வர்லால்.

'முழுப் பொறுப்பு ஏற்கிறேன்' என்ற தைரியமாகச் சொல்லி விட்டாலும் உள்ளூர அவருக்குள்

உதறல்கள் கிளம்பியிருந்தன.

'அந்த தினேஷ் ஆர்வத்தில் - வேகத்தில் - வேலையை எடுத்திருக்கிறானா... இல்லை சாதிக்கக் கூடியவன் தானா...?'

யோசித்துக் கொண்டே காரில் ஏறினார்.

சாலையில் வழுக்கிச் செல்ல ஆரம்பித்தது கார்.

பௌச்சில் சொருகியிருந்த செல்ஃபோனை வெளியே எடுத்து உயிர்ப்பித்தார்.

பொத்தான்களுக்குப் பின்னே மஞ்சள் நிறத்தில் விளக்குகள் எரிய ஆரம்பித்தன.

எண்களை அழுத்தினார்.

ரிங் போய் ரிசீவர் எடுக்கப்பட்டதும் கேட்டார்.

"ஃப்யூச்சர் ட்ரெண்ட் செட்டர்ஸ்?"

"எஸ்..."

தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு தொடர்ந்தார்.

"ஐஎஸ்ஆர்ஓ விஞ்ஞானி சோப்ராவிடம் பேச வேண்டும்..."

"ஜஸ்ட் ஹோல்டு ஆன் த லைன் ஸார்..."

காத்திருந்த விநாடிகளில் எலக்ட்ரானிக் இசை காதுகளில் வழிந்தது.

இசை நின்றதும் சோப்ராவின் குரல் லைனுக்கு வந்தது.

"குட்ஈவினிங்... நான் சோப்ரா..."

"சுற்றுப் பயணம் வந்த பிரதமரை அவரது தற்காலிக அலுவலகத்தில் சந்தித்து விட்டு வருகிறேன்..."

"அழைப்பு விடுத்திருந்தாரா...?"

"ஆமாம்..."

"ராக்கெட் பற்றிக் கேட்டாரா...?"

"அதைப் பற்றிப் பேசத்தான் அழைப்பு... 'சொன்ன தேதியில் ராக்கெட்டைச் செலுத்த நான் முழுப் பொறுப்பு ஏற்கிறேன்' என்று அவரிடம் சொல்லி விட்டு வந்திருக்கிறேன்... அவர்களின் ப்ரீவியஸ் ட்ராக்கை அலசிப் பார்த்தீர்களா...?"

"பார்த்தேன்..."



"அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்...?"

"சேலஞ்சிங் வேலைகள் எடுத்துக் கொண்டு மிகச் சிறப்பாக செய்து தந்திருக்கிறார்கள்... நால்வருக்குமே அபாரமான சாஃப்ட்வேர் ஞானம் உள்ளது..."

"ஸோ... தே ஆர் வெல் க்வாலிஃபைட்...?"

"ஆமாம்... ஆனால்..."

"ஆனால் என்ன...?"

"ப்ரசன்ட் ப்ராக்ரஸ்தான் கவலை அளிக்கிறது..."

"புரியும்படி சொல்லுங்கள்..."

சில விநாடி மவுனித்து விட்டுத் தொடர்ந்தார் சோப்ரா.

"அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றே புரியவில்லை... 'நாங்கள் பணியை முழுவதுமாய் முடிக்கிற வரையில் குறுக்கிட வேண்டாம்... ஓரமாய் உட்கார்ந்து வேடிக்கை பாருங்கள். அல்லது ஐஎஸ்ஆர்ஓ வில் வேறு வேலை இருந்தால் அதைப் போய்ப் பாருங்கள்' என்று அலட்சியமாய்ச் சொல்கிறார்கள்... கடைசி நிமிஷத்தில் அவர்கள் கையை விரித்தால் இந்திய அரசாங்கத்திற்கு பதில் சொல்ல வேண்டியது நீங்களும் நானும்தான் - அவர்கள் அல்ல... இந்த முறை நமக்கு எக்ஸ்க்யூஸ் கிடைக்காது..."

சோப்ரா சொல்லச் சொல்ல நட்வர்லாலின் அடிவயிற்றை எதுவோ பிசைந்தது.

## 14

கனகவல்லியும், வேதாசலமும் கவலை அப்பிய முகங்களோடு நின்றிருந்தார்கள்.

கௌரிசங்கர் கண்ட்ரோல் அறையுடன் தொடர்பு கொண்டு பேசிவிட்டு வேதாசலத்திடம் திரும்பினார்.

"சந்திராவைக் கடத்திட்டுப் போனவன் தான் பேசினான்... அவன் பேசப் பேச லைன் கட் ஆயிடுச்சு..."

வேதாசலம் கேட்டார்.

''என்ன சொன்னான் இன்ஸ்பெக்டர்...?''

''அஞ்சு கிலோ தங்கத்துக்காகத்தான் அந்தம் மாவைக் கடத்திட்டுப் போயிருக்கறதா சொன்னான்...''

''அஞ்சு கிலோ தங்கமா...?''

கேள்விக் குறிப் பார்வைகளோடு இருவரும் கௌரிசங்கரைப் பார்த்தார்கள்.

''எஸ்... அதைப் பத்தி உங்களுக்கு ஏதாவது தெரியுமா...?''

இருவரும் தலையசைத்து மறுத்தார்கள்.

''நோ இன்ஸ்பெக்டர்... இதைப்பத்தி எங்களுக்கு எதுவும் தெரியலை... அஞ்சு கிலோ தங்கத்துக்காக கடத்தினேன்னு சொல்றான்... அவன் என்ன 'மீன்' பண்றான்னு தெரியலையே...? சந்திராவை விடுவிக்கணும்ன்னா நாம அஞ்சு கிலோ தங்கம் அவனுக்குக் கொடுக்கணுமா...?''

''அதைப் பத்தி விளக்கமா கேக்கறதுக்குள்ளே லைன் கட் ஆயிடுச்சு... அநேகமா அவன் மறுபடியும் போன் பண்ணுவான்... கன்ட்ரோல் ரூமில் சொல்லி எக்சேஞ்ச் மூலமா அவனோட நம்பரை ட்ரேஸ் பண்ணச் சொல்லி இருக்கேன்... கான்ஸ்டபிள்சை வரச் சொல்லியிருக்கேன்... அவன் பேசறப்போ இங்கே அவன் குரலைப் பதிவு செய்ய ஏற்பாடு செஞ்சிடலாம்... ஆள் உங்களுக்குத் தெரிஞ்சவனா இருந்தா குரலை வெச்சுக் கண்டு பிடிச்சிடலாம்...''

அவர் சொன்ன போது - ஒரு ஜீப்பில் நாலைந்து கான்ஸ்டபிள்கள் வந்து இறங்கினார்கள்.

ஹெட் கான்ஸ்டபிள் சல்யூட் அடித்தார்.

கௌரிசங்கர் கேட்டார்.

''இந்த நம்பருக்கு வர்ற கால்ஸை ட்ரேஸ் பண்ண ஏற்பாடு பண்ணிட்டீங்களா...?''

''எக்சேஞ்சில் சொல்லிட்டேன் ஸார்...''

''கன்ட்ரோல் ரூமில் சொல்லி சந்தேகத்துக் கிடமான சர்தார்ஜிகளை விசாரிக்க ஏற்பாடு செஞ்சீங்களா...?''

''செஞ்சாச்சு ஸார்... இன்ஸ்ட்ருமென்ட்ஸ் கொண்டு வந்திருக்கேன்... இங்கிருக்கும்



டெலிபோனில் கனெக்ட் பண்ணிட்டா கான்வர் ஸேஸனை டேப் பண்ணிடலாம்...''

''செய்ங்க...''

அவர்கள் பரபரப்பாய் தங்கள் காரியங்களைச் செய்து முடிக்கவும் அந்த 'கால்' வரவும் சரியாய் இருந்தது.

கௌரிசங்கர் ரிசீவரை எடுத்தார்.

அவர் எதிர்பார்த்த மாதிரியே அவன்தான் பேசினான்.

''ஹலோ...'' என்ற கௌரிசங்கரின் குரலை அடையாளம் கண்டு கொண்டான்.

''ஸாரி இன்ஸ்பெக்டர்... நம்ம டெலிபோன் டிபார்ட்மென்ட்டின் லட்சணம் இது... முக்கியமான விஷயத்தைப் பேசறப்போதான் லைனில் கோளாறு ஏற்படும்...''

''கதை பேச வேண்டாம். விஷயத்துக்கு வா...''

''கரெக்ட் கரெக்ட்... நான் கதை பேசிட்டிருந்தேன்னா நீங்க லைனை ட்ரேஸ் பண்ணிடுவீங்க... அப்படி பண்ணினாலும் பரவாயில்லை... நான் வேற ஒருத்தர் லைனை திருட்டுத்தனமா எடுத்து பேசிட்டிருக்கேன்... கஷ்டப்பட்டு லைனை ட்ரேஸ் பண்ணி யாரோ ஒரு நல்ல மனுஷனைப் போய் தொல்லை பண்ணப் போறீங்க... ஆல் த பெஸ்ட்...'' என்று இளக்காரமாய்ச் சொல்லி அவன் சிரிக்க -

கோபத்தை அடக்கிக் கொண்டு சொன்னார்.

''நான் லைன் ட்ரேஸ் பண்ணலை... சந்திராவோட நிலைமை என்ன? அதைச் சொல்லு...''

''என் கஸ்டடியில் இப்போ பாதுகாப்பா இருக் காங்க... ஆனா நான் கேட்டது கிடைக்கலைன்னா பாதுகாப்பா அவங்களை மேல் உலகத்துக்கு அனுப்பி வெச்சிருவேன்...''

''நீ என்ன கேக்கறே... அதை மொதல்ல சொல்லு...''

''அதான் அப்பவே சொன்னேனே... அஞ்சு கிலோ தங்கம்...''

''சந்திரா பார்ம் ஹவுசில் விருந்தாளியா

தங்கியிருக்காங்க... அவங்களைப் பணயமா கடத்திட்டுப் போய் அஞ்சு கிலோ தங்கத்தை பணயத் தொகையா கேக்கறது ரொம்ப சைல்டிஷ்... யாரோ ஒரு தோழிக்காக அவ்வளவு பெரிய இழப்புக்கு இவங்க தயாரா இருப்பாங்கன்னு நினைக்கறியா...?''

''நீங்க நினைக்கற அளவுக்கு நான் முட்டாள் இல்லை இன்ஸ்பெக்டர்... சந்திராவுக்காக நீங்க யாரும் அஞ்சு கிலோ தங்கம் தர வேண்டாம்... அந்த தங்கம் சந்திரா கிட்டேயே இருக்கு...''

''என்ன சொல்றே...?''

''அமெரிக்காவிலிருந்து சந்திரா அஞ்சு கிலோ தங்கம் கொண்டு வந்திருக்கா... அதை எங்கே வெச்சிருக்கான்னு சொல்ல மறுத்துட்டா... ஃபார்ம் ஹவுசில் வெச்சு மிரட்ட பொறுமை இல்லாததால கடத்திட்டு வந்துட்டேன்... இங்கே வெச்சு மிரட்டினதில் உண்மை வெளியாயிடுச்சு... சந்திரா கொண்டு வந்த ஏர் பேகுக்குள்ளே பேகோட பேகா வெச்சு அஞ்சு கிலோ தங்க பிஸ்கட்ஸ் தைக்கப்பட்டிருக்கு... தையலைப் பிரிச்சு அந்த பிஸ்கட்ஸை எடுத்துகிட்டு நான் சொல்ற இடத்துக்கு கனகவல்லியும், வேதாசலமும் வரணும்... கவனியுங்க... கூட நீங்க வந்திங்கன்னா ஆட்டம் க்ளோஸ்... இடம் நேரம் எல்லாம் அப்புறம் சொல்றேன்...''

''டொக்''

தொடர்பு துண்டானது.

விஷயத்தைச் சொன்னதும் கனகவல்லியும், வேதாசலமும் பரபரப்பாகி சந்திராவின் பேகைத் தேடிப் பிடித்து அதன் பக்கவாட்டுத் தையல்களைப் பிரித்தவர்கள் திடுக்கிட்டார்கள்.

உள்ளே வெறும் அட்டைதான் இருந்தது.

தங்க பிஸ்கெட்டுகள் இல்லை.

கௌரிசங்கர் இருவரையும் ஊடுருவினார்.

''உள்ளே தங்க பிஸ்கட்ஸ் இல்லையே...?''

''எங்களுக்கு எதுவும் தெரியாது இன்ஸ்பெக்டர்...''

''மறுபடியும் அவன் போன் பண்ணினா என்ன சொல்றது...?''



''உள்ளதைத்தானே சொல்ல முடியும்... தங்க பிஸ்கெட்ஸ் இல்லைன்னு சொல்லுங்க...''

அவர் சொன்ன விநாடி - மறுபடி டெலிபோன் கூப்பிட்டது.

இந்த முறை 'கால்' கண்ட்ரோல் அறையிலிருந்து வந்திருக்க - பேச ஆரம்பித்த கௌரிசங்கர் திடுக்கிட்டார்.

''என்ன...? தன்வீர்சிங் என்பவன் கொலை செய்யப்பட்டுக் கிடக்கறானா...?''

## 15

மார்ச்சுவரி வேனில் ஏற்றப்பட்டிருந்தாள், தன்வீர்சிங்கைப் போலத் தோற்றத்தில் இருந்த மாலினி.

கௌரிசங்கர் ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தபோது - அங்கே இருந்த சப் - இன்ஸ்பெக்டர் போலீஸ் சம்பிரதாயங்களை ஓரளவுக்கு முடித்திருந்தார்.

உத்தியோக சல்யூட் அடித்துவிட்டு எதிரே நின்றவரிடம் கௌரிசங்கர் கேட்டார்.

''ஸ்பாட் என்கொயரிஸ் முடிஞ்சதா...?''

''முடிஞ்சது ஸார்...''

''கன் ஃபர்ம்டு மர்டர் தானா...?''

''எஸ் ஸார்...''

''மோட் ஆஃப் டெத்...?''

''மேக்னம் ரிவால்வரால சுட்டிருக்காங்க... நெற்றிப் பொட்டில் தோட்டா பாய்ஞ்சிருக்கு...''

''பாடி இந்தக் கிணத்துக்குள்ளேயா மிதந்துட்டிருந்தது...?''

''ஆமா ஸார்... கல்லைக் கட்டி உள்ளே டிஸ்போஸ் பண்ணியிருக்காங்க... ஆனா கயிறு அறுந்து பாடி மேல வந்துடுச்சு...''

''இந்தப் பகுதியில் உள்ளவங்க யாராவது பாடியை அடையாளம் காட்டினாங்களா...?''

''இல்ல ஸார்...''

''அப்புறம் எப்படி இது தன்வீர்சிங்தான்னு

தெரிஞ்சது...?''

''விக்டிம்மோட சட்டைப் பாக்கெட்டில் லாட்ஜ் சாவி இருந்தது... அங்கே போன் போட்டு விசாரித்ததில் தன்வீர்சிங்கற பெயரில் ரூம் எடுத்திருந்தவன்தான் இங்கே கொலை செய்யப்பட்டிருக்கான்ங்கற விஷயம் தெரிஞ்சது ஸார்...''

ஒரு விநாடி இடைவெளி விட்ட சப்-இன்ஸ்பெக்டர் தொடர்ந்து சொன்னார்.

''விக்டிம்மோட உடைகளைத் தரோவா சோதனை போட்டதில் இன்னொரு அதிர்ச்சி காத்திருந்தது...''

''என்ன...?''

''அது ஆண் இல்லை... பெண் ஸார்...''

நிமிர்ந்தார் கௌரிசங்கர்.

''அப்படின்னா ஃபார்ம் ஹவுஸுக்கு ஃபோன் பண்ணி என்கூடப் பேசினது இந்தப் பொண்ணாக இருக்குமோ...?''

''இந்தப் பொண்ணு கட்டைக் குரல்ல பேசித்தான் மத்தவங்களை ஏமாத்தியிருக்கணும்... ஆனா போன்ல உங்க கூட பேசினது இந்தப் பொண்ணா இருக்க வாய்ப்பில்லை ஸார்...''

''எப்படி சொல்றீங்க...?''

''பாடி கண்டிஷனைப் பார்த்தா இந்தப் பொண்ணு இறந்து பத்து மணி நேரங்களுக்கு மேல ஆகியிருக்கும்ன்னு தெரியுது... அப்படியிருக்க உங்க கூட போனில் பேசினது இந்தப் பொண்ணா இருக்க வாய்ப்பில்லை...''

''தன்வீர்சிங் பேசறேன்னு சொன்னானே...?''

''இந்தப் பொண்ணும் இவளோட கூட்டாளியும் சேர்ந்து அந்த சந்திராவைக் கடத்தியிருக்கலாம்... ஏதாவது தகராறு ஏற்பட்டு கூட்டாளியால இந்தப் பொண்ணு தீர்த்துக்கட்டப் பட்டிருக்கலாம்... கடத்தினது சிங் - அப்படிங்கற அலிபியை அப்படியே மெயின்டெயின் பண்ண கூட்டாளி, தன்வீர் சிங்கற பேரில் உங்க கூட பேசியிருக்கலாம்...''

''இப்போ அங்கே ஒரு புது குழப்பம் வேற உண்டாகியிருக்கு... ப்ளாக் மெயிலர் சொன்ன



இடத்தில் தங்க பிஸ்கெட்ஸ் இல்லை...''

''ஒரு வேளை கனகவல்லியும், வேதாசலமும் ஏற்கெனவே பிஸ்கெட்ஸை அபகரிச்சிருப் பாங்களோ...?''

''இருக்கலாம்... அதற்கான சாத்தியங்களும் நிறையவே இருக்கு... இப்போ நம்ம முன்னாடி இருக்கற கேள்விகள்... சர்தார்ஜி வேஷத்திலிருக்கும் இந்தப் பொண்ணு யாரு...? இவளைக் கொலை செஞ்சு சந்திராவைக் கடத்தின ப்ளாக்மெயிலர் யாரு...? தங்கம் எங்கே போச்சு...?''

''ப்ளாக் மெயிலரை நாம் ட்ரேஸ் பண்ணியிருந்தால் தலைவலி குறையும் ஸார்...''

''சர்தார்ஜி வேஷத்திலிருந்த இந்தப் பொண்ணு தங்கியிருந்த ஹோட்டல்ல இருந்து நூல் பிடிச்சோம்ன்னா குற்றவாளியைக் கண்டு பிடிக்க வாய்ப்பிருக்குன்னு நினைக்கிறேன்...''

''எஸ்... ஸார்...''

கௌரிசங்கர் பைக்கில் பயணித்து மாலினி தங்கியிருந்த ஹோட்டலை அடைந்த ரிசப்ஷனைத் தொட்ட நிமிஷம் - அவருக்காக ஒரு போன் கால் அங்கே காத்துக் கொண்டிருந்தது.

திகைப்புடன் ரிசீவரை வாங்கினார்.

'இந்த ஹோட்டலுக்குள் வந்தும் வராததுமாய் போன் செய்வது யார்...?'

மனசுக்குள் கேள்வியை அரைத்துக் கொண்டே, ''ஹலோ... ஸ்பீக்கிங்...'' என்றார்.

''இன்ஸ்பெக்டர்... என் பெயர் ஆசிஷ்...''

''யார் நீ?'' என்றார் கௌரிசங்கர்.

''நான் யார் என்பது முக்கியமில்லை! உங்களோடு பேச வேண்டும்...''

''என்ன பேச வேண்டும்...?''

''தன்வீர்சிங் என்ற பெயரில் சர்தார்ஜி வேஷத்திலிருந்த பெண் கொலை செய்யப்பட்டிருக்கிறாள்... அவள் யார்...? அவளைக் கொலை செய்தது யார்...? அமெரிக்காவிலிருந்து வந்த சந்திரா என்கிற பெண்மணியைக் கடத்தினவனும்... இந்தப் பெண்ணைக் கொலை

செய்தவனும் ஒரே ஆள்தானா...? சந்திரா கொண்டு வந்த ஐந்து கிலோ தங்கம் எங்கே...? இத்தனை கேள்விகளுக்கும் விடையைத் தேடி அந்த ஹோட்டலில் விசாரணையை ஆரம்பிக்க இருக்கிறீர்கள்... நீங்கள் திறமையான இன்ஸ்பெக்டர்... தோண்டித் துருவி ஒவ்வொரு கேள்விகளுக்கும் விடையைக் கண்டு பிடித்து விடுவீர்கள்... ஆனால் அது லாங் ப்ராசஸ்... எத்தனை நாட்களாகும்...? எத்தனை சிரமங்கள் நீங்கள் பட வேண்டியிருக்கும்...? ஆனால் நான் ஒரு ஷார்ட் கட் தருகிறேன்... அத்தனைப் புதிருக்கும் விடை இன்றே உங்களுக்குத் தெரிந்துவிடும்..."

"முதலில் யார் நீ என்பதை சொல்..."

"லாங் ப்ராஸஸா... ஷார்ட் கட்டா என்று முதலில் நீங்கள் முடிவு செய்யுங்கள்... லாங் ப்ராஸஸ் என்றால் இப்போதே நான் தொடர்பைத் துண்டித்துக் கொள்கிறேன்... ஷார்ட்கட் என்றால் நான் சொல்லும் இடத்திற்கு நீங்கள் தனியாக வாருங்கள்..."

"நான் எங்கே வரவேண்டும்...?"

"சிவாஜி நகரில் இருக்கிற ஆரியா அபார்ட்மெண்ட்ஸ்... ஃப்ளாட் நெம்பர் 77..."

ரிசீவரைச் சாத்திய கௌரிசங்கர் ஹோட்டலை விட்டு வெளியேறி பைக்கைத் தொட்டார்.

மனசிற்குள் ஆர்வம் அரிக்க ஆரியா அபார்ட்மெண்ட்சை நோக்கி வேகமாய் பைக்கை விரட்டினார்.

## 16

அந்த அபார்ட்மெண்ட் சலவைக்கல் முகப்போடு பளிச்சென்றிருந்தது.

பைக்கை டூ வீலர் பார்க்கிங்கில் சொருகி விட்டு லிஃப்ட்டில் பயணித்தார் கௌரிசங்கர்.

ஏழாவது ப்ளோரில் லிஃப்டைத் துறந்து வராந்தாவில் நடையிட்டார்.

வரிசையாய் இருந்த ப்ளாட்களில் கதவுகள் இறுகச் சாத்தியிருந்தன.



77 என்ற பித்தளை எண்ணைத் தாங்கி இருந்த பிள்ஷ் டோர் அருகில் நின்று காலிங் பெல்லை அழுத்தினார் கௌரிசங்கர்.

இடுப்பில் இருந்த பிஸ்டலை ஒரு ஜாக்கிரதைக்காகத் தொட்டுப் பார்த்து கொண்டார்.

சில விநாடி நிசப்தத்துக்குப் பிறகு கதவு லேசாகப் பிளந்தது.

ஒரு சர்தார்ஜி எட்டிப் பார்த்தான்.

"உள்ளே வாருங்கள்..."

உள்ளே பிரவேசித்துக் கொண்டே கௌரிசங்கர் அந்த சர்தார்ஜியைப் பார்த்துக் கேட்டார்.

"நீதான் ஆசிஷ்ஷா...?"

"நோ ஸார்... அதோ உட்கார்ந்திருக்கறாரே... அவர்தான் மிஸ்டர் ஆசிஷ்...

அங்கே உட்கார்ந்திருந்த ஐம்பது வயது நபர் பருமனான உடம்பைத் தூக்கிக் கொண்டு எழுந்தார்.

"க்ளாட் டு மீட் யூ இன்ஸ்பெக்டர்"

குலுக்குவதற்காக கையை நீட்டினார்.

கௌரிசங்கர் உடனடியாய் அவரிடம் கையைக் கொடுக்கவில்லை.

டெலிபோனில் ஒருமையில் பேசியிருந்தாலும் அவருடைய கண்ணியமான தோற்றத்தை உத்தேசித்து மரியாதை தொனிக்கும் குரலில் கேட்டார்.

"யார் நீங்கள்...? அதை முதலில் சொல்லுங்கள்..."

"பிரதமரின் கட்டுப்பாட்டில் இருக்கும் உளவுத் துறை அதிகாரி..."

புன்னகையுடன் சொல்லி ஆசிஷ் அந்த அடையாள அட்டையை அவரிடம் நீட்டினார்.

அதை வாங்கிப் பார்த்த கௌரிசங்கர் திகைப்புடன் ஒரு உத்தியோக பூர்வமான சல்யூட் அடித்தார்.

"ஸாரி ஸார்... டெலிபோனில் நான் உங்களிடம் ஹார்ஷாகப் பேசிவிட்டேன்..."

"அது உங்கள் தவறு இல்லை... நான் முறைப்படி அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லை... நான் யார் என்று தெரியாததால் நீங்கள் ஹார்ஷாகப்

பேசினீர்கள்..."

"நீங்கள் எதற்காக என்னைத் தொடர்பு கொண்டு இருக்கிறீர்கள்...? நான் விசாரிக்கும் கேஸுக்கும் நீங்கள் பார்க்கும் வேலைக்கும் எதாவது தொடர்பு இருக்கிறதா...?"

"ஆமாம்... இரண்டு பேரும் ஒரே கேஸின் வெவ்வேறு நுனிகளைப் பற்றி இருக்கிறோம்..."

"புரியவில்லையே...?"

"உள்ளே வாருங்கள்... உங்களுக்கு சில ஆச்சர்யங்களைக் காட்டுகிறேன்..."

ஆசிஷ் ஃப்ளாட்டின் உட்புறம் அழைத்துச் செல்ல - குழப்பமாய் அவர் பின்னால் சென்றார் கௌரிசங்கர்.

உட்புற அறை விஸ்தாரமாய் இருந்தது.

அங்கே சில கம்ப்யூட்டர் டெர்மினல்கள்.

அதன் முன்னே சந்திரா உட்கார்ந்திருந்தாள்.

"நீங்கள் தேடி வந்த சந்திரா இங்கேதான் பத்திரமாக இருக்கிறார்... சந்திராவைக் கடத்தி வந்தது... டெலிபோனில் தங்க பிஸ்கட் கேட்டு மிரட்டியது... எல்லாமே இதோ பஞ்சாபி இளைஞரான இந்த ப்யாரேஷ்தான்... சர்தார்ஜி வேஷம் போட்டு சந்திராவைப் பின்தொடர்ந்து கொண்டிருந்த மாலினி என்ற பெண்ணைக் கொலை செய்தது இந்த ப்யாரேஷ் உட்பட இன்னும் மூன்று பேர்..."

"இவ்வளவு பயங்கர குற்றவாளிகளுடன் நீங்கள் ஏதோ நண்பனைப் போல பேசிக் கொண்டிருக்கிறீர்களே...? இந்த ப்யாரேஷை இந் நேரம் போலீஸுக்கு தெரியப்படுத்தியிருக்க வேண்டாமா...?"

"உணர்ச்சிக்கு வேலை கொடுத்திருந்தால் நான் அப்படித்தான் செய்திருப்பேன்... மூளைக்கு வேலை கொடுத்ததால் ஒரு கொலையையும் ஒரு கடத்தலையும் செய்தவர்களை நண்பர்களாக அங்கீகரித்திருக்கிறேன்..."

"என்ன சொல்கிறீர்கள்...?"

ஒரு புன்னகையுடன் ஆசிஷ் சொல்ல ஆரம்பித்தார்.

"இந்தக் காரியங்களைச் செய்த இளைஞர்கள்



நான்கு பேரும் அண்டர் கிரவுண்ட் தாதாக்களோ சமூகத்தின் மோசமான அங்கங்களோ அல்ல... பெரிய கம்ப்யூட்டர் ஸ்காலர்கள்... ஃப்யூச்சர் ட்ரெண்ட் செட்டர்ஸ் என்ற பெயரில் ஒரு சாப்ட்வேர் ஏற்று மதி நிறுவனத்தை நடத்தி வருபவர்கள்... சிக்கலில் தவித்த இண்டியன் ஸ்பேஸ் ரிசர்ச் ஆர்கனைஸேஷனுக்கு இவர்கள் உதவ முன் வந்தார்கள்... அந்த உதவியின் பொருட்டுத்தான் இந்தக் கொலையும், கடத்தலும்..."

"இன்னும் எனக்கு முழுதாய்ப் புரியவில்லை ஸார்..."

"இவர்கள் ஐஎஸ்ஆர்ஓ வுக்கு உதவ முன் வந்ததை அடுத்து பிரதமர் அலுவலகம் அவர்களைப் பற்றிய தகவல்களை சேகரிக்கச் சொல்லி அந்தப் பணியில் என்னை அமர்த்தியது... இவர்களைக் கண்காணிக்கப் போய் இந்த ஃப்ளாட்டுக்கு ப்யாரேஷ் அடிக்கடி வருவதைக் கண்டு பிடித்தேன்... ஃப்ளாட்டுக்குள் நுழைந்து தங்க பிஸ்கட் கேட்டு போனில் மிரட்டிக் கொண்டிருந்த ப்யாரேஷைக் கையும் களவுமாய்ப் பிடித்து விட்டேன்... அதற்கப்புறம்தான் உண்மைகள் தெரிந்தன..."

"என்ன உண்மைகள்...?"

"உண்மையில் சந்திரா தங்க பிஸ்கட் எதையும் கொண்டு வரவில்லை... அதெல்லாம் போலீசைத் திசை திருப்ப இவர்கள் மேற்கொண்ட நாடகம்..."

"அவர்கள் தங்கம் கொண்டு வரவில்லை என்றால் எதற்காக இந்த நாடகம்...? அமெரிக்காவில் குழந்தைகள் காப்பகம் நடத்தும் சாதாரண சந்திராவை எதற்காகக் கடத்தினார்கள்..."

ஆசிஷ் சிரித்தார்.

"இவர் சாதாரண சந்திரா இல்லை... குழந்தைகள் காப்பகம் நடத்துகிறார் என்பதெல்லாம் பொய்..."

"சந்திரா ஏன் அப்படி பொய் சொல்ல வேண்டும்...?"

"அவருடைய வேலை அப்படி... அவர் நாசாவில் சூப்பர் கம்ப்யூட்டர் டிவிஷனில் உயர் மட்ட விஞ்ஞானி... இந்தப் பணியில் அவர் இருப்பதை

ரகசியமாய் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது நாசா அவருக்கு இட்ட உத்தரவு..."

கௌரிசங்கர் வியப்பில் உறைந்தார்.

"நிஜமாகவே இது திகைப்பூட்டும் விஷயம்தான்..."

"இன்னும் கேளுங்கள்... மகளுக்கு மாப்பிள்ளை பார்க்கும் விஷயமாய் மூன்று மாத லீவில் அவர் இந்தியா வந்திருக்கிறார்... இந்த விபரம் ஃப்யூச்சர் ட்ரெண்ட் செட்டர்களுக்குத் தெரிந்திருக்கிறது... ஐஎஸ்ஆர்ஓ, சிக்கலில் வீழ்ந்த போது சிக்கலைத் தீர்க்கும் சாமர்த்தியம் சந்திராவுக்கு உண்டு என்பதை அறிந்து வைத்திருந்த அவர்கள்... சந்திராவைக் கடத்த தீர்மானித்தார்கள்... இடையில் கரடி மாதிரி குறுக்கே வந்தவள் மாலினி..."

"சர்தார்ஜி வேடமிட்ட பெண்ணா...?"

"ஆமாம்...!"

"யார் அவள்...?"

"அவள் சந்திராவைக் கண்காணிப்பதற்கா நாசாவால் அப்பாயின்ட் செய்யப்பட்ட இந்திய பிரதிநிதி..."

"அதனால்தான் மாறுவேடமிட்டு அவ சந்திராவையே தொடர்ந்து கொண்டு இருந்தாளா...?"

"ஆமாம்... காரியத்தில் குறுக்கிட்ட அவளை தீர்த்துக்கட்ட வேண்டியதாகிவிட்டது... அ சாதகமாகப் பயன்படுத்தி அவள் மாதிரியே பே இல்லாத தங்க பிஸ்கட்டைக் கேட்டு ஒரு கடத்த நாடகம் ஆடி போலீசைத் திசை திருப் முயன்றிருக்கிறார்கள் இந்த இளைஞர்கள்... ஆனா துரதிர்ஷ்டவசமாய் மாலினியின் பாடி கிணற்றி மிதக்க ஆரம்பித்து விட்டது..."

"அப்படியானால் சந்திராவைக் கடத்தி சென்றதின் உண்மையான நோக்கம்...?"

"நவீன சூப்பர் கம்ப்யூட்டர் தொழில் நுட்பத் அவர் மூலமாகக் கறந்து அதை ஐஎஸ்ஆர்ஓ வுக் தந்து உதவுவதுதான்!"

"சந்திரா அதற்கு ஒப்புக் கொண்டாரா...?"

"மிரட்டின போது மசியவில்லை... தங்க



வாதத்தை எடுத்து வைத்த போது சந்திரா மனம் மாறி விட்டார்..."

"அவர்கள் வாதம் என்ன...?"

"இந்தியாவிலிருந்து செல்லும் விஞ்ஞானிகளைக் கொண்டு தான் மேலைநாடுகள் டெக்னாலஜிகளை உருவாக்குகின்றன... அவர்களைக் கொண்டு உருவாக்கின உத்திகளை ஒரு சிக்கலின் போது நமக்குத் தர மறுப்பது நியாயமில்லை... ஸோ இந்திய விஞ்ஞானியான சந்திராவிடமிருந்து டெக்னாலஜியை மிரட்டியாவது பறிப்பதில் தவறு இல்லை என்பது அவர்களின் வாதம்... சந்திரா மனம் மாறி டெக்னாலஜி ரகசியங்களை அளிக்க ஒப்புக் கொண்டுவிட்டார்... தவிர, இனி இந்தியாவிலேயே தங்கியிருந்து இந்தியாவுக்காக உழைப்பது என்றும் முடிவெடுத்து விட்டார்..."

கௌரிசங்கர், கம்ப்யூட்டர் முன்னால் தீவிரமாய் இயங்கிக் கொண்டிருந்த சந்திராவை ஆச்சர்யமாய்ப் பார்க்க அவள், திரும்பிப் பார்த்து புன்னகைத்தாள்.

"ஆமாம் இன்ஸ்பெக்டர்... இந்த இளைஞர்கள்... இவ்வளவு சிறிய வயதில் அபார நாட்டுப் பற்றோடு பணியாற்றும் போது... நான் அந்நிய சக்திகளுக்கு விலைபோவதை நினைத்து இப்போது வெட்கப்படுகிறேன். இத்தனை நாளாக அவர்கள் நிழலில் பணத்துக்காக அடிமையாய் இருந்தது போதும்... இனிமேல் இந்தியாவுக்காக என் உழைப்பைக் கொடுப்பேன்."

கௌரிசங்கர் ஆசிஷ்ஷிடம் திரும்பினார்.

"என்ன இருந்தாலும் இது சட்ட விரோதம்தானே...? பிரதமர் இதை அனுமதிப்பாரா...?"

"அனுமதிக்க மாட்டார்தான்... சில சமயம் சட்டங்களை விட தர்மங்களுக்கு மதிப்பளிப்பது நல்லது... நம் இந்தியாவின் கவுரவம் காப்பாற்றப்பட தர்ம நியாயம் பார்த்து முடிவெடுப்பதுதான் சிறந்தது... இந்த வழக்கை நடத்தி வருகிற நீங்கள் ஒரு புறம். நான் இன்னொரு புறம். நானும் நீங்களும் தேச, நலனை உத்தேசித்து இவர்களைக் காட்டிக்

கொடுக்காமல் விட்டு விட்டால்... சொன்ன தேதியில் இந்திய ராக்கெட் பறக்கும்... மாலினி என்ற தேசத் துரோகப் பெண்ணை இவர்கள் கொன்றதை நான் ஒரு குற்றமாகக் கருதவில்லை... நான் இதை இப்படியே விட்டுவிடப் போகிறேன்... ப்யூச்சர் ட்ரெண்ட் செட்டர்ஸின் நான்கு இளைஞர்களும் அபாரத் திறமை உள்ள நேர்மையான இளைஞர்கள் என்று பிரதமரிடம் சர்டிபிகேட் கொடுத்து விட்டு ஒதுங்கிக் கொள்ளப் போகிறேன்... ஆனால் உங்கள் நிலை என்ன...? அதைத் தெரிந்து கொள்ளத் தான் உங்களை இங்கே வரவழைத்தேன்...''

சில விநாடிகளுக்கு யோசனையில் ஆழந்த கௌரிசங்கர் முடிவாய் எழுந்தார்.

''எனக்கு ஆசிஷ் என்ற அதிகாரியைத் தெரியாது... ப்யூச்சர் ட்ரெண்ட் செட்டர்ஸ் என்ற கம்பெனியைத் தெரியாது... தேசப் பற்று மிகுந்த அந்த துடிப்பான நான்கு இளைஞர்களைத் தெரியாது... சந்திரா என்ற பெண்மணி மர்மமாகக் கடத்தப்பட்டதையும், சர்தார்ஜி வேடமிட்ட பெண் ஒருத்தி மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டதையும் அந்தப் பெண் தங்கியிருந்த ஹோட்டலில் துவங்கி விசாரணையைத் தொடரப் போகிறேன்...''

சந்திரா, ப்யாரேஷ், ஆசிஷ் மூன்று பேரும் கௌரிசங்கரிடம் பெரிய புன்னகைகளோடு கை குலுக்கினார்கள்.

''தாங்க்யூ இன்ஸ்பெக்டர்... நீங்கள் விசாரணையை முடிப்பதற்குள் இந்திய ராக்கெட் கம்பீரத்தோடும், சுயமாகத் தயாரித்து அனுப்பப்பட்ட கவுரவ முத்திரையோடும் வானத்தை எட்டி விடும்...''

பனி பெய்து கொண்டிருந்த ராத்திரி நேரம் ஒன்பது மணிக்கு அந்த அபார்ட்மெண்ட்டினின்றும் வெளியேறி பைக்கை உதைத்தார் கௌரிசங்கர்.

(முற்றும்)